بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 11

இதழ் 24

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - துல் ஹஜ் 24

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - இஹ்ஸான் 11 ★ 11 ஜீன் 2026

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ اللّٰہَ یَاۡمُرُ بِالۡعَدۡلِ وَالۡاِحۡسَانِ وَاِیۡتَآیِٔ ذِی الۡقُرۡبٰی

وَیَنۡہٰی عَنِ الۡفَحۡشَآءِ وَالۡمُنۡکَرِ وَالۡبَغۡیِ ۚ

یَعِظُکُمۡ لَعَلَّکُمۡ تَذَکَّرُوۡنَ

நிச்சயமாக அல்லாஹ் (நீங்கள்) நேர்மையுடன் நடந்து கொள்ளவும், நன்மை செய்யவும், உறவினர்களுக்கு (கொடுப்பதைப் போல)க் கொடுக்கவும், கட்டளையிடுகிறான். (எல்லா வகை) வெட்கக் கேட்டிலிருந்தும், வெறுக்கத் தக்கவற்றிலிருந்தும், வரம்பு மீறுதல்களிலிருந்தும் அவன் தடுக்கின்றான். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக அவன் உங்களுக்கு அறிவுரை வழங்குகின்றான்.(16:91)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நபிமொழி**

## நபிமொழிகளின் ஒளியில் நீதியும் நேர்மையும்

ஹஸ்ரத் ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பனீ மக்தூம் குலத்தைச் சேர்ந்த ஒரு பெண் திருடிவிட்டாள். இந்தச் சம்பவத்தின் காரணமாக குரைஷியர்கள் மிகுந்த கவலையடைந்தனர். அவர்கள், ‘இது குறித்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் யார் பேச முடியும்?‘ என சிந்தித்தனர். இறுதியில், நபியவர்களுக்கு மிகவும் நேசத்திற்குரியவரான உஸாமா பின் ஸைது (ரலி) அவர்களைத் தவிர வேறு யாருக்கும் இதற்குத் துணிச்சல் வராது என்று எண்ணினர். எனவே, அவர்கள் உஸாமாவை இதற்காகத் தயார்படுத்தினர். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் இது குறித்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் பரிந்துரைத்தபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகவும் கோபமடைந்து, ‘அல்லாஹ்வின் சட்ட வரம்புகள் குறித்தா நீர் பரிந்துரை செய்கின்றீர்?‘ என்று கேட்டார்கள்.

பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) எழுந்து நின்று உரையாற்றினார்கள். மேலும் கூறினார்கள்: உங்களுக்கு முன்னிருந்த மக்கள் ஏன் அழிந்து போனார்கள் என்றால், அவர்களில் செல்வாக்கு படைத்த நபர் திருடினால், அவருக்குப் பல்வேறு சாக்குப்போக்குகளைக் கூறி (தண்டிக்காமல்) விட்டுவிடுவார்கள். அதுவே, அவர்களில் ஒரு பலவீனமான நபர் திருடினால், அவருக்கு முழுமையான தண்டனையை வழங்கிவிடுவார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மதின் மகள் பாத்திமாவே திருடினாலும், அவளுடைய கையையும் நான் நிச்சயமாக துண்டித்து விடுவேன். சிறிதளவும் சலுகை காட்ட மாட்டேன். ( முஸ்லிம், கிதாபுல் ஹுதூத்)

* * * * * * * * * * *

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்**

## இஸ்லாத்தில் நீதி மற்றும் நன்மையின் முக்கியத்துவம்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நீங்கள் நீதியையும், நன்மையையும், உறவினர்களுக்கு (கொடுப்பதைப் போல)க் கொடுப்பதையும்அதற்கு பொருத்தமான தருணங்களில் கடைப்பிடியுங்கள் என்று இறைவன் உங்களுக்கு கட்டளையிட்டுள்ளான். எனவே இன்ஜீலின் போதனையானது, உலக அமைப்பிற்கு இணக்கமாகவும், வலுவாகவும் இருக்கக் கூடிய அந்த முழுமையான நிலையை விடக் குறைவானதும், தாழ்ந்ததும் ஆகும் என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். மேலும் அந்த போதனையை முழுமையானதாகக் கருதுவதும் ஒரு பெரும் தவறாகும். அத்தகைய (இன்ஜீல்) போதனை ஒருபோதும் முழுமையானதாக இருக்க முடியாது.

(பராஹீனே அஹ்மதிய்யா, பகுதி 4, ரூஹானி கஸாயின் தொகுதி 1, பக்கம் 426, 477 அடிக் குறிப்பு எண் 3)

அடுத்து, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வுடனும், அவனது படைப்புகளுடனும் நீதியாக நடந்துகொள்ள வேண்டும் என்பது இறைவன் உங்களுக்கு வழங்கிய கட்டளையாகும். அதாவது அல்லாஹ்வின் உரிமைகளையும் மற்றும் அவனது அடியார்களின் உரிமைகளையும் நிறைவேற்ற வேண்டும். உங்களால் முடிந்தால் அதையும் கடந்து நல்ல முறையில் நடக்க வேண்டும். அதாவது, நீதியை கடந்து இன்னும் முன்னேறி நன்மை செய்யுங்கள். அதாவது, கடமைகளை விட அதிகமாகவும், அத்தகைய தூய எண்ணத்துடனும் அல்லாஹ்வை வணங்குங்கள்; நீங்கள் அவனைப் பார்ப்பது போன்றோ அல்லது அவன் உங்களைப் பார்ப்பது போன்றோ இருக்க வேண்டும். மேலும், மனிதர்களின் உரிமைகளை நிறைவேற்றும்போது அவர்களுடன் கருணையுடனும், நற்பண்புடனும் நடந்து கொள்ளுங்கள். உங்களால் முடிந்தால், இதை

**இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம்.....**

**தஃப்ஸீரே கபீரிலிருந்து**

## நீதி நன்மை செய்தல் மற்றும் உறவினர்களுக்கு வழங்குதல் - முழுமையான இஸ்லாமிய போதனை

اِنَّ اللّٰہَ یَاۡمُرُ بِالۡعَدۡلِ وَالۡاِحۡسَانِ وَاِیۡتَآیِٔ ذِی الۡقُرۡبٰی

وَیَنۡہٰی عَنِ الۡفَحۡشَآءِ وَالۡمُنۡکَرِ وَالۡبَغۡیِ ۚ یَعِظُکُمۡ لَعَلَّکُمۡ تَذَکَّرُوۡنَ

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தில் மூன்று விஷயங்களைச் செய்யுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது, மேலும் மூன்று விஷயங்களிலிருந்து தவிர்ந்து இருக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. மேலும், இந்த விலகியிருப்பது அல்லாஹ்வின் கருணையை சுட்டிக்காட்டுகிறது. மேலும் நல்ல விஷயங்களைச் செய்யுமாறு கட்டளையிடுவது நேர்வழியைக் சுட்டிக் காட்டுகிறது. இந்த வசனம் திருக்குர்ஆன் முழுமையானது என்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அடுத்து, இதில் ஒழுக்கநெறி சார்ந்த அனைத்து படித்தரங்களும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக இந்த வசனம் மிக முழுமையானதாக ஆகிவிட்டது. மேலும், تِبۡیَانًا لِّکُلِّ شَیۡءٍ (ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாக விளக்குவது) என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த வசனம் இறுதியில், لَعَلَّکُمۡ تَذَکَّرُوۡنَ என்று முடிகின்றது. ذَکَرَ என்பதன் பொருளே تَذَکَّرَ என்பதன் பொருளும் ஆகும். ஆக, இதன் பொருள் என்னவென்றால்: நினைவில் கொள்ளுதல் அல்லது இறைவனின் பெருமையை எடுத்துபைப்பதாகும்.

**இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்....**

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

**அமைதி கருத்தரங்கு - 2026 மே 16 பிரிட்டன்**

**ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்**




**இஸ்லாத்தின் அடிப்படை போதனை என்னவென்றால், ஒரு மனிதன் தனக்கு எதை விரும்புகிறானோ, அதையே மற்றவருக்கும் விரும்ப வேண்டும் என்பதாகும்**

தஅவூத் மற்றும் தஸ்மியாவுக்குப் பிறகு, ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

மதிப்பிற்குரிய விருந்தினர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹு!

இன்று இந்த நிகழ்வில் நீங்கள் எங்களுடன் கலந்து கொண்டிருக்கின்றீர்கள். இதற்காக அனைத்து விருந்தினர்களுக்கும் நான் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அஹ்மதிய்யா ஜமாஅத் கடந்த இரண்டு தசாப்தங்களாக இந்த அமைதி கருத்தரங்கை நடத்தி வருகிறது. தற்போது உலகில் மோசமடைந்து வரும் சூழ்நிலைகளின் பின்னணியில், இந்த அனைத்து முயற்சிகளினாலும் இறுதியில் நடைமுறையில் என்ன பயன் ஏற்பட்டது? என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். இந்தக் கேள்வி கேட்கப்படுவது சந்தேகத்திற்கு இடமின்றி சரியானதுதான், ஆனால் இஸ்லாம் நமக்குக் கற்றுக் கொடுத்த போதனை என்னவென்றால், நாம் சோர்வடையாமலும், சலிப்படையாமலும் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பதாகும். எனவே, உலகில் நேர்மறையான மாற்றத்திற்காகவும், மனிதகுலத்தின் வாழ்வாதாரத்திற்காகவும் செய்யப்படும் முயற்சிகளை விட சிறந்த முயற்சி வேறு என்ன இருக்க முடியும்?

போர், கலவரம், அமைதியின்மை, வெறுப்பு மற்றும் அநீதிகளை நாம் தடுக்கத் தவறினால், நமது நாகரிகமும், பண்பாடும் நம் கண் முன்னாலேயே படிப்படியாக அழிந்து போவதை நாம் காண்போம். இந்த அழிவின் பாதிப்புகள் எவ்வளவு பயங்கரமானதாக இருக்கும் எனில், வரவிருக்கும் பல தலைமுறைகள் இதனால் பாதிக்கப்படும். இரண்டாம் உலகப் போரின் அழிவின் விவரங்கள் நெஞ்சை உலுக்கக் கூடியவையாக இருக்கின்றன.

ஆனால், அக்காலத்தில் அமெரிக்கா மட்டுமே அணு ஆயுதங்களை வைத்திருந்த ஒரேயொரு நாடாக இருந்தது, ஆனால் இன்று அணுசக்தி கொண்ட பல நாடுகள் உள்ளன. மேலும், இன்றைய அணு ஆயுதங்கள் அக்காலத்து ஆயுதங்களை விட பல மடங்கு அபாயகரமானவை மற்றும் நாசகரமானவை ஆகும்.

இன்று நான் சில ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆய்வாளர்களின் பகுப்பாய்வுகளை உங்கள் முன் வைக்கிறேன், அதிலிருந்து கண் முன்னால் வரவிருக்கும் அழிவு எவ்வளவு பயங்கரமானதாகவும், கொடூரமானதாகவும் இருக்கும் என்பதை நீங்கள் அனுமானித்துக் கொள்ள முடியும். இந்த நாசகரமான ஆயுதங்களைப் பயன்படுத்துவது என்பது உண்மையில் நம்முடைய சொந்த பிள்ளைகளுக்கும், வரவிருக்கும் தலைமுறைகளுக்கும் எதிராக போர் தொடுப்பதற்குச் சமமாகும்.

அயர்லாந்து அதிபர் மைக்கேல் ஹிக்கின்ஸ், நாம் போர் அச்சுறுத்தல்களின் காலகட்டத்திற்குள் நுழைந்துவிட்டோம் என்று எச்சரித்துள்ளார். இந்தக் காலகட்டத்தில் ராஜதந்திர முயற்சிகள் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வுக்குப் பதிலாக குழப்பம், பதற்றம் மற்றும் வன்முறை ஆகியவை ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

இன்று ஒவ்வொரு நபரும் தனது உரையாடல்களில் ஆயுதங்கள் மற்றும் நாசகரமான போர்களைப் பற்றி எந்தவித அச்சமும் இன்றி வெளிப்படையாகப் பேசுவதைக் காண முடிகிறது; இதன் காரணமாக அமைதியின்மையும், கவலையும் அதிகரித்து வருகிறது என்று ஸ்லோவாக்கிய பிரதமர் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

மனிதன் தனக்காக எதனை விரும்புகின்றானோ அதனையே பிறருக்காகவும் விரும்ப வேண்டும் என்பது இஸ்லாத்தின் அடிப்படை போதனையாகும். இது எவ்வளவு சிறந்த ஒரு போதனை என்றால், உலகம் இந்த போதனையின்படி செயல்படத் தொடங்கினால், இந்த உலகம் அமைதிப் பூங்காவாக மாறிவிடும்.

ஜெர்மன் அதிபரும் ஈரானுக்கு எதிரான போருக்கு எதிராக அறிக்கை விடுத்துள்ளார்.

மேலும் இந்த விஷயத்தில் போர் எதிர்ப்பு தெரிவிக்கும் ஒவ்வொரு நபரையும் நான் பாராட்டுகிறேன். இங்கு நான் ஜெர்மன் அதிபரையும் பாராட்டுகிறேன், ஆனால் அறிக்கைகளை விட செயல் ரீதியிலான நடவடிக்கைகள் மிகவும் அவசியமானவையாகும். கொள்கை விஷயங்களில் செயல் நடவடிக்கைகளை ஆய்வு செய்து பார்த்தால், அவை இல்லாததற்குச் சமம்.

போப் லியோ அவர்கள், மூன்றாம் உலகப் போர் தொடங்குவது குறித்துப் பேசியுள்ளார். மேலும் மூன்றாம் உலகப் போர் இப்போது மெது மெதுவாக நடந்து கொண்டிருக்கிறது என்று கூறியுள்ளார்.

மூன்றாம் உலகப் போரோ நடந்து கொண்டிருக்கிறது என்பது ஓர் உண்மையாகும் என்று நான் கூறுகிறேன்; ஆனால், போரின் பயங்கரத்திலிருந்து தங்களை காப்பாற்றிக் கொள்வதாக எண்ணிக் கொண்டு மக்கள் அதை மறுப்பதற்கு முயற்சி செய்கின்றனர்.

அடுத்து, ஒரு சட்டவிரோதமான செயலை மற்றொரு சட்டவிரோதமான செயலால் சரிசெய்ய முடியாது என்று ஸ்பெயின் பிரதமர் கூறியுள்ளார். சிறிய போர்கள் மற்றும் மோதல்களின் விளைவாக பெரும் பெரும் நாசகரமான போர்கள் தொடங்கி விடுகின்றன. இத்தகைய சூழ்நிலைகளில் மிகுந்த எச்சரிக்கையையும், விவேகத்தையும் வெளிப்படுத்துவது அவசியமாகும்.

ஒரு தரப்பிலிருந்து அநீதி இழைக்கப்பட்டால், மறுதரப்பும் அநீதியின் பாதையைத் தேர்ந்தெடுக்கக் கூடாது. இன்று வல்லரசு நாடுகள் நீதியையும், சர்வதேச சட்டத்தையும் புறந்தள்ளிவிட்டன. அவர்களைப் பொறுத்தவரை அவர்களின் சொந்த நலன்களே அனைத்துமாக இருக்கின்றன.

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம்....

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயரிய நற்பண்புகளான உண்மை நேர்மை மற்றும் இறையச்சம் ஆகியவற்றின் ஒளியில் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 ஏப்ரல் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஷஹாதத்** மாதம் **17 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

قُلْ لَّوْ شَآءَ اللّٰهُ مَا تَلَوْتُهٗ عَلَيْكُمْ وَلَآ اَدْرٰىكُمْ بِهٖ
فَقَدْ لَبِثْتُ فِيْكُمْ عُمُرًا مِّنْ قَبْلِهٖ اَفَلَا تَعْقِلُوْنَ
فَمَنْ اَظْلَمُ مِمَّنِ افْتَرٰى عَلَى اللّٰهِ كَذِبًا اَوْ كَذَّبَ
بِاٰيٰتِهٖ اِنَّهٗ لَا يُفْلِحُ الْمُجْرِمُوْنَ

இந்த வசனங்களின் மொழியாக்கம்:

'நீர் கூறுவீராக! இதற்குப் பதிலாக வேறெதாவது போதிக்க அல்லாஹ் நாடியிருந்தால் இதனை நான் உங்களுக்கு முன் ஓதிக் காட்டியிருக்க மாட்டேன்; அவன் இதனை உங்களுக்கு அறிவித்திருக்கவும் மாட்டான். இதற்கு முன்னர் நான் உங்களிடையே நீண்ட காலம் வாழ்ந்துள்ளேன். அவ்வாறிருந்தும் நீங்கள் அறிவு கொண்டு சிந்திக்க மாட்டீர்களா? அல்லாஹ்வின் மீது பொய்யுரைப்பவனை விட அல்லது அவனது அடையாளங்களைப் பொய்யாக்குபவனை விட மிகப் பெரும் அநியாயக்காரன் யார்? நிச்சயமாகக் குற்றவாளிகள் வெற்றி பெற மாட்டார்கள். (யூனுஸ்: 17 - 18)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் பல்வேறு அம்சங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டு வருகின்றது. இன்று அன்னாருடைய உண்மை, வாய்மை மற்றும் நேர்மை ஆகிய பண்பு குறித்து எடுத்துரைக்கப்படும். அன்னாருடைய வாழ்க்கைச் சம்பவங்களில் அன்னாருடைய உண்மைத்தன்மைக்கான உயரிய உதாரணங்கள் காணக் கிடைக்கின்றன. எதிரிகள் கூட அன்னாருடைய நேர்மை, உண்மை ஆகியவற்றின் உயர்தரத்தை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அன்னாருடைய உண்மைத் தன்மையின் இந்த தரத்தையே நான் மேலே ஓதிக்காட்டிய திருக்குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் எடுத்துரைத்துள்ளான்.

மேலும், 'நான் எந்தச் சூழலிலும் ஒருபோதும் பொய் சொன்னதில்லை; உண்மையைக் கைவிட்டதில்லை; இதற்கு நீங்களே சாட்சியாக உள்ளீர்கள். அவ்வாறிருக்க, இறைவனிடமிருந்து வராத ஒரு மார்க்கத்தைக் கொண்டு வந்து, அல்லாஹ்வின் மீது நான் பொய் சொல்வேனா? இது ஒருபோதும் சாத்தியமில்லை' என்று அம்மக்களிடம் பிரகடனம் செய்யுமாறு அல்லாஹ் அன்னாருக்குக் கட்டளையிட்டான். இத்துடனேயே, அன்னார் (ஸல்) தம்மை பின்பற்றுபவர்களிடம், இப்போது நீங்கள் என்னைப் பின்பற்றத் தொடங்கிவிட்டதால், என்னை பின்பற்றுவதாக நீங்கள் வாக்குறுதி கொடுத்துள்ளதால் உண்மை (வாய்மை)யில் மிக மேலான தரத்தை நிலைநாட்டுங்கள் என்று அன்னார் (ஸல்) வலியுறுத்தினார்கள்.

எனவே, இன்று நாம் அனைவரும் இந்த வகையில் நம்மைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில், இந்த உண்மையின் உயர்தரம்தான் நமது வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் வெற்றிக்கான உத்தரவாதமாகவும், தப்லீஃக் செய்வதற்கான வழிகளைத் திறப்பதாகவும் அமையும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கை குறித்து எடுத்துரைக்கும்போது, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்கள் அல்லது (தம்) குத்பாவில் இவ்வாறு கூறியுள்ளார்கள்; (அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பற்றி நாம் பார்க்கும்போது, அன்னாருடைய எதிரிகளே அன்னாரை உண்மையாளர் என்றும் நம்பிக்கையாளர் என்றும் ஒப்புக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். அன்னார் (ஸல்) மீது அவர்கள் எவ்வித குற்றச்சாட்டையும் சுமத்தவில்லை; மாறாக, மிகக் கடும் எதிரிகள் கூட அன்னாருடைய புனிதத் தன்மைக்கும் தூய்மைக்கும் சாட்சியம் அளித்தனர். உதாரணமாக, மக்காவில் ஒரு கூட்டம் கூடியது. வெளியூர்களிலிருந்து மக்கள் மக்காவிற்கு வரும்போது, அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றிக் கேட்டால் நாம் என்ன பதில் சொல்வது? (என்று அவர்கள் ஆலோசித்தனர்.) கருத்து வேறுபாடு ஏற்படாமல் இருக்கவும், ஆளுக்கொரு பதில் சொல்கிறார்கள் என்ற அவப்பெயர் வராமல் இருக்கவும், அனைவரும் சேர்ந்து ஒரே பதிலை முடிவு செய்து கொள்ளுங்கள். ஹஜ்ஜுக்கு வருபவர்களிடம் சொல்வதற்கு ஒரு முடிவிற்கு வாருங்கள் எனப் பேசிக்கொண்டனர்.

அப்போது அவர்களில் ஒருவர், 'இவருக்குப் பொய் சொல்லும் பழக்கம் உண்டு; இவர் சொல்வதெல்லாம் பொய் என்று கூறிவிடுவோம்' என்றார். இதைக் கேட்டவுடன் நஸ்ர் பின் ஹாரிஸ் என்ற நபர் எழுந்து நின்று, 'இப்படிச் சொல்லக் கூடாது! இதை யாரும் நம்ப மாட்டார்கள். 'முஹம்மது (ஸல்) அவர்கள் உங்கள் மத்தியில்தானே தனது வாலிபக் காலத்தைக் கழித்தார். அப்போது அவர்தான் உங்கள் அனைவரையும் விட நற்செயல்கள் புரிபவராகவும், அனைவரையும் விட அதிக உண்மையாளராகவும், அனைவரையும் விட அதிக நம்பிக்கைக்குரியவராகவும் கருதப்பட்டார். இப்போது அவருடைய காது ஓரங்களில் நரை முடி தோன்றி, அவர் ஒரு போதனையைக் கொண்டு வந்தவுடன் - அதாவது இஸ்லாமியப் போதனையைத் தந்தவுடன் - அவரைப் பொய்யர் என்று கூறுகிறீர்களே!

இறைவன் மீது ஆணையாக! இந்தச் சூழ்நிலையில் அவர் பொய்யராக இருக்க முடியாது என்று மக்களே பதிலளிப்பார்கள் என்று அவர் கூறினார்.

அந்த நபரின் இந்தப் பதிலைக் கேட்டவுடன் அனைவரும் தங்கள் தவறை ஒப்புக்கொண்டனர். இந்தக் குற்றச்சாட்டுக் பதிலாக வேறு (ஏதேனும்) வழிமுறை (உள்ளதா என்பது) பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். அந்த நபர் முன்வைத்த விஷயம் எவ்வளவு உண்மையானது! இதற்கு முன்னர் எப்போதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அம்மக்கள் பொய் என்ற அவதூறைச் சுமத்தியிருந்தால் இப்போது யாராவது அதனை நம்பியிருப்பார்கள். ஆனால், வாழ்நாள் முழுவதும் அன்னாரை உண்மையாளர் என்று கூறிவிட்டு, இப்போது திடீரென அன்னார் (ஸல்) மீது சுமத்தப்படும் பொய் என்ற அவதூறை யாரால்தான் உண்மையாக ஏற்க முடியும்?'

அதேபோல், ஹெராக்ளியஸ் (மன்னர்) அபூ ஸுஃப்யான் அவர்களிடம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பற்றி, அவர் எப்போதாவது பொய்

உம்மிடம் ஒருங்கே அமைந்துள்ளன என்பதாகும்.

சுருக்கமாகக் கூறின், மனிதனின் உள்ளத்தில் காணப்படும் பண்புகளான ஒழுக்கம், வெட்கம், நேர்மை, கனிவு, தன்மானம், உறுதி, கற்பு, தூய்மை, நிதானம், மற்றும் அனுதாபம் - அதாவது பிறர் மீதான பரிவு - போன்றவை; அதேபோல் வீரம், கொடைத்தன்மை, மன்னிப்பு, பொறுமை, உபகாரம், உண்மை, நன்றியுணர்வு உள்ளிட்ட இந்த அனைத்து இயல்பான நிலைகளும், அறிவு மற்றும் சிந்தனையின் ஆலோசனையுடன் அந்தந்த இடத்திற்கும், சூழலுக்கும் தகுந்தாற்போல் வெளிப்படுத்தப்படும்போது, அவை அனைத்தும் நற்குணங்கள் என்று அழைக்கப்படும்.
(இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம், ரூஹானீ கஸாயீன் தொகுதி 10, பக்கம் 333)

எனவே, நற்குணம் என்பது ஒருவரை முகமலர்ச்சியுடன் சந்திப்பதோ அல்லது ஸலாம் சொல்வதோ மட்டும் கிடையாது; மாறாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி, அனைத்து நற்செயல்களிலும், மக்களுடனான கொடுக்கல் வாங்கல் உள்ளிட்ட அனைத்து விவகாரங்களிலும் உயர்ந்த குணங்களை வெளிப்படுத்துவதே உண்மையான நற்குணமாகும். இதன் பக்கமே நாம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.‘

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையை பரப்புவதற்காகவே உலகிற்கு வந்தார்கள். எனவே, பல்வேறு சந்தர்ப்பங்களில் அன்னார் ஈமான் கொண்டவர்களுக்கும் உண்மையில் நிலைத்திருக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

இது தொடர்பாக ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘உங்கள் மீது உண்மை கடமையாகிறது. ஏனெனில் உண்மை நன்மையின் பக்கம் வழிநடத்துகிறது. நன்மை சொர்க்கத்தின் பக்கம் வழிநடத்துகிறது. ஒரு மனிதன் தொடர்ந்து உண்மையை பேசி, உண்மையைத் தேடுவதிலேயே ஈடுபட்டிருந்தால், அவர் அல்லாஹ்விடம் 'ஸித்தீக்' (மிகப் பெரும் உண்மையாளர்) என்று எழுதப்படுகிறார்.

மேலும், நீங்கள் பொய்யை விட்டு தவித்துக் கொள்ளுங்கள்; ஏனெனில் பொய் தீமையின் பக்கம் வழிநடத்துகிறது. தீமை நெருப்பின் பக்கம் வழிநடத்துகிறது. ஒரு மனிதன் தொடர்ந்து பொய் பேசி, பொய் பேசுவதிலேயே ஈடுபட்டிருந்தால், அல்லாஹ்விடம் அவன் 'கஸ்ஸாப்' (மிகப் பெரும் பொய்யன்) என்று எழுதப்படுகிறான். ஒருவன் 'கஸ்ஸாப்' என்று எழுதப்பட்டுவிட்டால், அவன் நெருப்பை நோக்கியே செல்கிறான்.‘(ஜாமிஉத் திர்மிதி, ஹதீஸ் எண்: 1971)

எனவே, இது மிகவும் அச்சப்பட வேண்டிய இடமாகும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிப்பதாவது: ‘நிச்சயமாக பொய் என்பது எந்த நிலையிலும் அனுமதிக்கத்தக்கது அல்ல; தீவிரமான சூழலில் பேசும்போதும் சரி! ;அல்லது விளையாட்டாகப் பேசும்போதும் சரி! அது கூடாது!.‘

சிலர் விளையாட்டாகப் பொய் சொல்லிவிட்டு, நாங்கள் சும்மா தமாசுக்குத்தான் பொய் சொன்னோம் என்று கூறுவார்கள். விளையாட்டாகக் கூட பொய் சொல்வது அனுமதிக்கப்பட்டதல்ல. அதேபோல் ஒரு நபர் தனது குழந்தையிடம் ஒரு வாக்குறுதி அளித்துவிட்டு அதனை நிறைவேற்றாமல் இருப்பதும் கூடாது. நிச்சயமாக உண்மை நன்மையை நோக்கி வழிகாட்டுகிறது; நன்மை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கிறது. நிச்சயமாகப் பொய் தீமையை நோக்கி அழைத்துச் செல்கிறது; தீமை நரகத்திற்கு இட்டுச் செல்கிறது. உண்மையாளரைப் பற்றி, இவர் உண்மையை உரைத்தார்; நற்செயல் புரிந்தார் என்று கூறப்படும். பொய்யரைப் பற்றி, இவர் பொய் சொன்னார்; தீய செயல் புரிந்தார் என்று கூறப்படும்.

அல்லாமா ராஸி அவர்கள் ஸூரா தவ்பாவின் 119 -வது வசனமான,
- நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; உண்மையாளர்களுடன் இணைந்திருங்கள் என்பதற்கு விளக்கம் அளிக்கும்போது பின்வருமாறு கூறுகிறார்கள்:

ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, ‘அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் எனது தீய செயல்களிலிருந்து தப்பிக்க விரும்புகிறேன். ஆனால் எனக்கு மது அருந்துதல், விபச்சாரம், திருட்டு மற்றும் பொய் சொல்வது ஆகியவை மிகவும் பிடிக்கும். இந்த பழக்கங்கள் என்னிடம் மிக அதிகமாக உள்ளன. தாங்கள் இவற்றை ஹராம் என்று கூறுகிறீர்கள். இப்போது நான் ஈமான் கொள்ள விரும்புகிறேன். ஆனால் தாங்கள் இவற்றைத் தடுத்துள்ளீர்கள். இவை என்னிடத்தில் மிக அதிகமாக உள்ளன. இவற்றை முற்றிலுமாகக் கைவிடும் வலிமை எனக்கு இல்லை. இவற்றில் ஒன்றை மட்டும் நான் கைவிடுவதாக தாங்கள் ஏற்றுக்கொண்டால், நான் தங்கள் மீது ஈமான் கொள்வேன்‘ என்று கூறினார். அதற்கு அன்னார் (ஸல்), ‘சரி! அப்படியானால் பொய் சொல்வதைக் கைவிடு!‘ என்று கூறினார்கள். அவரும் அதற்கு உடன்பட்டு முஸ்லிமானார்.

பிறகு அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு வெளியே சென்றபோது, அவருக்கு மது வழங்கப்பட்டது. அப்போது அவர், நான் இதனை அருந்திவிட்டு, பிறகு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம் கேட்கும்போது நான் பொய் சொன்னால், நான் வாக்கு மீறியவன் ஆவேன்; உண்மையைச் சொன்னால் எனக்குத் தண்டனை விதிக்கப்படும் என்று எண்ணினார். உடனே அவர் மது அருந்துவதைக் கைவிட்டார். பிறகு விபச்சாரம் செய்யும் வாய்ப்பு வந்தபோதும் இதே எண்ணம் அவர் மனதில் தோன்றியது; அதையும் கைவிட்டார். அதேபோல் திருடுவதையும் (கைவிட்டார்).

பின்னர், அவர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்று, ‘தாங்கள் (ஸல்) செய்த காரியம் எவ்வளவு அற்புதமானது! தாங்கள் என்னைப் பொய் சொல்வதிலிருந்து தடுத்தபோதே, மற்ற அனைத்துப் பாவங்களின் வாசல்களும் எனக்கு மூடப்பட்டுவிட்டன என்று கூறி, ஒவ்வொரு தீமையிலிருந்தும் தவ்பா செய்து விட்டார். (தஃப்ஸீருல் கபீர், இமாம் ராஸீ, பாகம் 16, பக்கம் 227,தாருல் ஃபிக்ர், பெய்ரூத் 1981-ம் ஆண்டு)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்கள் கூறும்போது, ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மிக நெருங்கிய, உண்மையான நண்பராக இருந்தார்கள். அன்னார் (ஸல்) நபித்துவப் பிரகடனம் செய்தபோது, குறைஷியர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்து, ‘அபூபக்ரே! உமது தோழருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது நவூதுபில்லாஹ்! என்று கூறினர். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவருக்கு என்ன நேர்ந்தது? என்று கேட்க, அவர் மஸ்ஜிதுல் ஹராமில் மக்களைத் ஏகத்துவத்தின் பக்கம், அதாவது ஒரே இறைவனின் பக்கம் அழைக்கிறார்; மேலும், தாம் ஒரு நபி என்று கூறுகிறார் என்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர் இவ்வாறு கூறினாரா? என்று கேட்க, அதற்கு, ஆம்! அவர் மஸ்ஜிதுல் ஹராமில் இதனைச் சொல்லிக் கொண்டிருக்கிறார் என்று அவர்கள் கூறினர்.

உடனே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, அன்னாருடைய (வீட்டுக்) கதவைத் தட்டினார்கள்; அன்னாரை வெளியே அழைத்தார்கள். அன்னார் (ஸல்)

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

சொன்னதுண்டா? என்று கேட்டபோது, இன்றுவரை அவர் பொய் சொன்னதில்லை என்று பதிலளித்தார். இன்றுவரை என்ற சொல்லை நான் சேர்த்ததற்குக் காரணம், ஒருவேளை இனிவரும் காலங்களில் அவர் பொய் சொல்லக்கூடும் என்ற சந்தேகத்தை உண்டாக்குவதற்காகவே என்றும் அவர் கூறினார்.

அதேபோல், ஒருமுறை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மலை மீது ஏறி மக்களை அழைத்தார்கள். இந்தச் சம்பவத்தை நான் முன்னரும் கூறியுள்ளேன். இப்போது (அன்னாரின்) உண்மை(த்தன்மை) தொடர்பாக இது கூறப்படுகிறது. மக்கள் அனைவரும் ஒன்று திரண்டபோது அன்னார் அவர்களை நோக்கி, 'இன்ன பள்ளத்தாக்கில் உங்களைத் தாக்குவதற்காக ஒரு படை திரண்டுள்ளது என்று நான் உங்களிடம் கூறினால், நீங்கள் அதை நம்புவீர்களா?' என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், 'நிச்சயமாக நாங்கள் நம்புவோம்' என்று பதிலளித்தார்கள். உண்மையில், மக்காவாசிகள் அறியாத வண்ணம் இவ்வளவு அருகாமையில் ஒரு படை ஒன்று திரள்வது என்பது சாத்தியமற்ற ஒன்றாக இருந்தது. இவ்வாறாக, சாத்தியமற்ற ஒரு விஷயத்தை அன்னார் கூறினாலும், மக்கள் அதை நம்புவதற்குத் தயாராக இருந்தது எதைக் காட்டுகிறது என்றால், அன்னாருடைய உண்மைத்தன்மையின் மீது அவர்களுக்கு இருந்த அசைக்க முடியாத நம்பிக்கையை காட்டுகிறது. அன்னார் (ஸல்) பொய் சொல்லவோ அல்லது ஏமாற்றவோ மாட்டார்கள் என்பதை அவர்கள் உறுதியாக அறிந்திருந்தார்கள். (ஹஸ்தி பாரி தஆலா, அன்வாருல் உலூம், தொகுதி 6, பக்கம் 309 - 310)

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மேற்கொண்டு கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எந்த விஷயம் எதிரிகளிடம் தாக்கத்தை ஏற்படுத்தியது? ஆரம்பத்தில் அம்மக்கள் திருக்குர்ஆனால் ஈர்க்கப்படவில்லை. திருக்குர்ஆனின் போதனைகள் அம்மக்களை ஈர்த்து அன்னாருடைய போதனைகளைப் பின்பற்ற வைக்கவோ அல்லது அன்னாருடைய கையில் பைஅத் செய்ய வைக்கவோ காரணமாக அமையவில்லை. மாறாக, ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் ஆரம்பகால வாழ்க்கைதான் அவர்களை ஈர்த்தது. அன்னார் (ஸல்) அவர்களிடையே வாழ்ந்தார்கள். அன்னாருடைய நேர்மை, உண்மை, படைப்பினங்கள் மீதான அன்பு மற்றும் தியாகம் ஆகியவையே அவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தின.

தநபித்துவ வாதத்திற்கு முன்பு அன்னார் (ஸல்) அம்மக்களை ஷிர்க்கை விட்டுத் தடுக்கவில்லை. ஏனெனில் அப்போது இறைக்கட்டளை வரவில்லை. ஆனால் அன்னார் (ஸல்) ஒருபோதும் முஷ்ரிக்காக இருந்ததில்லை. அன்னாருடைய உயர்ந்த ஒழுக்கமே மக்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்தத் தாக்கம் மெல்ல மெல்ல அவர்கள் மனதிற்குள் ஊடுருவியது. அன்னாருடைய அந்த நன்மைகளின் நிலை எவ்வாறானதாக இருந்தது என்றால், அன்னாருடைய முன்மாதிரி எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், அது அம்மக்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. அதற்கெதிராக அம்மக்கள் கண் உயர்த்திப் பார்க்கக் கூடத் துணியவில்லை. நான் முன்பே குறிப்பிட்டது போல், மக்காவில் மலை மீது ஏறி நின்று, 'ஒரு பெரும்படையே வந்திருக்கிறது என்று நான் சொன்னால் நம்புவீர்களா?' என்று கேட்டபோது - அது சாத்தியமில்லை என்றாலும் மக்கள் - ஆம்! நம்புவோம்! என்றார்கள். ஏனெனில், அன்னார் (ஸல்) ஒருபோதும் தவறான விஷயத்தைக் கூறியதில்லை என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். நீர் ஒருபோதும் பொய் சொல்லி நாங்கள் கேட்டதில்லை; நீர் எப்போதும் நேர்மையாளராகவும் உண்மையாளராகவுமே இருந்து வருகின்றீர்; எனவே இதையும் நாங்கள் நம்புவோம்' என்று பதிலளித்தனர்.

இதை அடிப்படையாகக் கொண்டு அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'அப்படியானால், நான் உங்களுக்கு மற்றுமொரு உண்மையான விஷயத்தைக் கூறுகிறேன்; அந்த உண்மையான விஷயம், அல்லாஹ் ஒருவன் என்பதாகும்; ஷிர்க் என்பது மிக மோசமான செயலாகும். எனவே, ஓர் இறைவனை வணங்குங்கள்; ஷிர்க்கைக் கைவிடுங்கள்; இல்லையெனில் உங்கள் மீது தண்டனை வரும்.'

இந்த போதனை அவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. அன்னாருடைய வாழ்க்கை, அன்னாருடைய செயல், அன்னாருடைய உண்மை, அன்னாருடைய நேர்மை மற்றும் அன்னாருடைய நன்மை ஆகியவையே அவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. ஆனால், இந்த வாதத்தை அன்னார் (ஸல்) முன் வைத்தபோது, அது அவர்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக, அவர்கள் அதனை நிராகரித்தார்கள். எனவே, அசல் விஷயம் என்னவென்றால், மனிதனின் செயல் மற்றும் முன்மாதிரி ஆகியவை மக்களை ஈர்க்கும் வகையில் அமைய வேண்டும். இது அமையும்போது, ஏதோ ஒரு காலத்தில் அல்லாஹ் எத்தகைய ஏற்பாடுகளை உருவாக்கித் தருவான் என்றால், அப்போது தப்லீஃகிற்கான வாசல்கள் திறக்கப்பட்டுவிடும். எதிரிகளாக இருந்த அதே மக்கள் பின்னர் இஸ்லாத்தின் மடியிலும் வரத் தொடங்கி விடுவார்கள்; உண்மையான இஸ்லாத்தைப் அறிந்துகொள்ளவும் ஆரம்பித்து விடுவார்கள். (குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 7, பக்கம் 374 - 375)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'இறைவன் நமது தலைவரும், எஜமானரும், இறை அச்சம் உடையவர்களின் தலைவரும், இறுதி கால நபியுமான (ஸல்) அவர்களுக்கு பல்வேறு விதமான ஆதரவுகளைக் கொண்டு வெற்றியையும் உதவியையும் அளித்தான். ஆரம்ப காலத்தில் ஹஸ்ரத் மூஸா (அலை) மற்றும் ஹஸ்ரத் ஈஸா (அலை) ஆகியோரைப் போன்றே அன்னாருக்கும் ஹிஜ்ரத் செய்யும் நிலை ஏற்பட்டது. இருப்பினும், அந்த ஹிஜ்ரத் தனக்குள்ளேயே வெற்றி மற்றும் உதவியின் அடித்தளத்தைக் கொண்டிருந்தது.

எனவே நண்பர்களே! இறை அச்சம் உடையவர் ஒருபோதும் அழிக்கப்படுவதில்லை என்பதை உறுதியாகத் தெரிந்துகொள்ளுங்கள். இரு சாரார் ஒருவருக்கொருவர் பகையுணர்வு கொண்டு அந்தப் பகை உச்சக்கட்டத்தை எட்டும்போது, அல்லாஹ்வுடைய பார்வையில் யார் இறை அச்சம் உடையவராக இருக்கிறாரோ, அவருக்கு விண்ணிலிருந்து உதவி இறங்குகிறது. இவ்வாறாக வானத்து தீர்ப்பின் மூலம் மார்க்க சண்டைகள் முடிவுக்கு வருகின்றன. பாருங்கள்! நமது தலைவரும் எஜமானரும், நமது நபியுமான ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மக்காவில் எவ்வளவு பலவீனமான நிலையில் தோன்றினார்கள்! அக்காலகட்டத்தில் அபூ ஜஹ்ல் போன்ற காஃபிர்களின் ஆதிக்கம் எவ்வளவு மிகைத்து இருந்தது! இலட்சக்கணக்கான மக்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயிருக்கு எதிரிகளாக மாறினர். பிறகு, எந்த விஷயம்தான் இறுதியாக நமது நபி (ஸல்) அவர்களுக்கு வெற்றியையும் முன்னேற்றத்தையும் அளித்தது? அன்னாருடைய நேர்மை, உண்மை, தூய உள்ளம் மற்றும் வாய்மை ஆகியவற்றின் காரணமாகவே இந்த வெற்றிகள் கிடைத்தன என்பதை உறுதியாக அறிந்துகொள்ளுங்கள். (ராஸே ஹகீக்கத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 14, பக்கம் 155 - 156)

பிறகு அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

'அல்லாஹ் நமது நபி (ஸல்) அவர்களை விளித்துக் கூறும்போது, إِنَّكَ لَعَلَىٰ خُلُقٍ عَظِيمٍ என்று கூறியுள்ளான். அதாவது, நிச்சயமாக நீர் மிக மகத்தான நற்குணத்தின் மீது நிலைபெற்றிருக்கின்றீர். இந்த விளக்கத்தின் அடிப்படையில் இதன் பொருள் என்னவென்றால், வள்ளல்தன்மை, வீரம், நீதி, கருணை, உபகாரம், வாய்மை, மன உறுதி உள்ளிட்ட அனைத்து வகையான நற்பண்புகளும்

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

முன்னால் வந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அபுல் காஸிமே! தங்களைப் பற்றி எனக்கு என்ன செய்தி வந்தடைந்துள்ளது? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூபக்ரே! என்னைப் பற்றி உமக்கு என்ன செய்தி எட்டியது என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், தாங்கள் ஏகத்துவத்தின் பக்கம் மக்களை அழைப்பதாகவும், தாங்கள் அல்லாஹ்வின் தூதர் என்று கூறுவதாகவும் எனக்கு செய்தி எட்டியுள்ளது என்றார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம்! அபூபக்ரே! நிச்சயமாக எனது இரட்சகன் என்னை நற்செய்தி அறிவிப்பவனாகவும் எச்சரிக்கை செய்பவனாகவும் ஆக்கியுள்ளான். மேலும் என்னை இப்ராஹீம் அவர்களின் துஆவின் பலனாகவும், அனைத்து மனிதர்களிடமும் தூதராகவும் அனுப்பியுள்ளான் என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! தாங்கள் ஒருபோதும் பொய் சொல்வதை நான் கண்டதில்லை. தங்களுடைய நேர்மை, உறவினர்களை அரவணைத்தல் மற்றும் நற்செயல்கள் காரணமாக நிச்சயமாக தாங்கள் நபித்துவத்திற்கு அதிக தகுதியானவர். தங்களது கையை நீட்டுங்கள்; நான் தங்களிடம் பைஅத் செய்கிறேன் என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது கையை நீட்ட, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருடைய கையில் பைஅத் செய்து, அன்னாரை உண்மைப்படுத்தினார்கள். அன்னார் (ஸல்) கொண்டு வந்தது உண்மையானது என்று ஒப்புக் கொண்டார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் பக்கம் அழைத்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எவ்விதத் தயக்கமும் காட்டவில்லை. (ரியாமுன் நஸ்ர், தொகுதி 1, பக்கம் 154 - 156, ஜூஸ்தி குதுப் கானா, லாஹூர் 2017-ம் ஆண்டு)

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நபித்துவத்தை வெளிப்படுத்தியபோது ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் சிரியா தேசத்திற்குச் சென்றிருந்தார்கள். அவர்கள் திரும்பி வரும்போது வழியில் ஒரு நபர் அவர்களைச் சந்தித்தார். அவரிடம் மக்காவின் நிலவரத்தைக் கேட்டவாறு ஏதேனும் புதிய செய்தி உண்டா என்று கேட்டார்கள். பொதுவாக ஒருவர் பயணத்திலிருந்து திரும்பும் போது தனது ஊர்க்காரர்களைச் சந்தித்தால் ஊரின் நிலைமை குறித்துக் கேட்பது வழக்கம். அதற்கு அந்த நபர், உமது நண்பர் முஹம்மது (ஸல்) அவர்கள் இறைத்தூதர் என்று வாதம் புரிந்துள்ளார் என்று புதிய செய்தியைக் கூறினார். அதைக் கேட்டவுடனேயே அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர் அவ்வாறு கூறியிருந்தால் நிச்சயமாக அவர் உண்மையானவரே! என்று கூறினார்கள். இதிலிருந்து அன்னார் (ஸல்) மீது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எந்த அளவு நல்லெண்ணம் கொண்டிருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது. அவர்கள் எவ்வித அற்புதத்தையும் கேட்கவில்லை. உண்மை என்னவென்றால், யாருக்கு நிலவரம் தெரியாதோ, யார் அந்நியராக இருக்கிறாரோ அவர் திருப்தியடைவதற்காக அற்புதத்தை கேட்பார். ஆனால், யாருக்கு மறுப்பே இல்லையோ அவருக்கு அற்புதத்தின் அவசியம் என்ன?

சுருக்கமாக, ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் வரும் வழியிலேயே செய்தியைக் கேட்டு ஈமான் கொண்டார்கள். மக்கா வந்தடைந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, தாங்கள் நபித்துவ வாதம் செய்தது உண்மையா என்று கேட்டார்கள். அன்னார், ஆம், அது உண்மை என்று கூறியபோது, ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள், தாங்கள் சாட்சியாக இருங்கள்; தங்களை முதலில் உண்மைப்படுத்தியவன் நானே என்று கூறினார்கள். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 337, 2022-ம் ஆண்டு பதிப்பு)

மற்றோர் இடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'ஆரம்ப காலத்திலேயே (இறைச்) செய்தியை கேட்டவுடன் பைஅத் செய்து அதனை ஏற்றுக்கொள்பவனே தகுதியுள்ள மனிதன் ஆவான்; உண்மையில் அதுவே அவனது நற்பேறு ஆகும். ஆரம்பத்தில் அதனைப் பெறாதவனுக்கு எந்தத் திறமையோ, சிறப்போ இல்லை. யார் வீண் விவாதங்களில் ஈடுபடுகிறாரோ அவருக்கு எவ்விதத் தகுதியும் இல்லை. அல்லாஹ் எல்லா விஷயங்களையும் தெளிவுபடுத்திய பிறகு, கற்களும் மரங்களும் கூடப் பேசும். அதாவது அனைத்தும் வெளிப்பட்ட பிறகு (அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள்). அடையாளங்கள் வெளிப்படும் போது எல்லாம் தெளிவாகத் தெரிந்த பிறகு அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். எவர் ஆரம்பத்திலேயே ஏற்றுக்கொண்டாரோ அவரே மிகவும் கண்ணியத்திற்குரியவர் ஆவார். உதாரணமாக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஏற்றுக் கொண்டதைப் போல! அன்னார் (ரலி) எந்த அற்புதத்தையும் கேட்கவில்லை; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நாவிலிருந்து அச்செய்தியைக் கேட்பதற்கு முன்பே ஈமான் கொண்டார்கள்.'

அதாவது, வாதத்தை கேட்பதற்கு முன்பே ஈமான் கொண்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வியாபார விஷயமாகச் சென்றிருந்தது, வழியில் ஒருவரைச் சந்தித்தது, அவரிடம் ஏதேனும் புதிய செய்தி உண்டா? என்று கேட்டது, அதற்கு அவர் உங்களது நண்பர் நபித்துவ வாதம் செய்துள்ளார் என்று கூறுவது, இதைக் கேட்டவுடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர் அவ்வாறு நபித்துவ வாதம் புரிந்திருந்தால் அவர் உண்மையாளரே என்று கூறுவது ஆகிய இந்தச் சம்பவங்கள் அனைத்தையும் எடுத்துரைத்துவிட்டு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை)




அவர்கள் கூறுகிறார்கள்:

'இப்போது சிந்தித்துப் பாருங்கள்! ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அப்போது எந்தவோர் அடையாளத்தையும் அற்புதத்தையும் கோரவில்லை; மாறாக, செய்தியைக் கேட்ட உடனேயே ஈமான் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நாவிலிருந்து நேரடியாக அந்தப் வாதத்தைக் கூட அவர்கள் கேட்டிருக்கவில்லை. மற்றொருவர் மூலமாகவே அதனைக் கேள்விப்பட்டார்கள். எனினும் உடனடியாக அதனை உண்மைப்படுத்தினார்கள். இது எத்தகைய மகத்தான ஈமான்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரைக் கேட்ட உடனேயே, அதில் பொய் இருப்பதற்குச் சாத்தியமே இல்லை என்று அவர்கள் கருதிவிட்டார்கள். அன்னார் (ஸல்) நபித்துவ வாதம் செய்துள்ளார்கள் என்ற செய்தியைச் செவியுற்றதும் அதன் மீது ஈமான் கொண்டார்கள். ஏனெனில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருபோதும் பொய் சொல்ல மாட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. பாருங்கள்!

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எந்தவோர் அடையாளத்தையும் கோரவில்லை. இதனால்தான் அன்னாருக்கு ஸித்தீக் உண்மையால் நிறைந்தவர் என்ற பெயர் கிடைத்தது. வெறும் முகத்தைக் கண்ட உடனேயே இவர் பொய்யர் அல்ல என்பதை அன்னார் (ரலி) அடையாளம் கண்டுவிட்டார்கள். எனவே, உண்மையாளர்களை அடையாளம் காண்பதும் அவர்களை ஏற்றுக்கொள்வதும் கடினமான காரியமாக இருப்பதில்லை; அவர்களின் அடையாளங்கள் வெளிப்படையாகத் தெரிகின்றன.' (மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 122, 2022-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இது குறித்து விவரிக்கும்போது கூறுகிறார்கள்:

'ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆரம்ப கால நபித்துவ வாதத்தின்போது அளித்த

சாட்சியத்தை என்னால் கண்டும் காணாமல் இருக்க முடியாது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவனின் அழைப்பைச் செவியுற்று, இவ்வுலகமே இந்த போதனையை எதிர்க்கும் என்பதைக் கண்டு, 'கதீஜா! என் உயிருக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன்' என்று கூறியபோது, 'மகிழ்ச்சி அடையுங்கள்; இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ் தங்களை ஒருபோதும் இழிவுபடுத்த மாட்டான்' என்று ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும்! தாங்கள் (ஸல்) மகிழ்ச்சியாக இருங்கள்; ஏனெனில் தாங்கள் (ஸல்) எப்போதும் உறவினர்களை அரவணைக்கின்றீர்கள்; உண்மையையே பேசுகின்றீர்கள்; துன்பப்படுபவர்களின் துன்பத்தைச் சுமக்கின்றீர்கள்; ஏழைகளுக்கு உதவுகின்றீர்கள்; விருந்தினர்களை உபசரிக்கின்றீர்கள்; நல்ல பணிகளில் அவ்வப்போது உதவி புரிகின்றீர்கள்' என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) கூறுகிறார்கள்: கவனித்துப் பாருங்கள்! 55 வயதுடைய ஒரு பெண்மணி, அன்னாரது ஊரைச் சேர்ந்தவர், அன்னாரது கோத்திரத்தைச் சேர்ந்தவர், 15 ஆண்டுகளாக அன்னாரது மணவாழ்க்கையில் இருப்பவர் எத்தகைய சாட்சியத்தை அளிக்கிறார் என்று பாருங்கள்! அன்னார் (ஸல்) கவலையிலும், பதற்றத்திலும் இருந்த அந்த நேரத்தில், ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் அளித்த சாட்சியம் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. அன்னாரிடம் இப்பண்புகள் இல்லையென்றால், ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் அந்த வார்த்தைகள் அந்த நேரத்தில் ஆறுதலைத் தந்திருக்காது.' (இர்ஷாதாத்தே நூர், தொகுதி 2, பக்கம் 330- 331, அடிக்குறிப்பு)

ஷூஅப் அபீ தாலிப் (எனும்) பள்ளத்தாக்கில் முற்றுகை செய்யப்பட்டிருந்த நிலையில் மூன்றாவது ஆண்டு நெருங்கியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து செய்தியைப் பெற்றுத் தமது பெரிய தந்தை அபூ தாலிபிடம் ஒரு தகவலைத் தெரிவித்தார்கள். அதாவது, பனூ ஹாஷிம் கோத்திரத்தாரைப் புறக்கணிப்பதாகக் கூறி கஃபாவில் தொங்கவிடப்பட்டிருந்த அந்த ஒப்பந்தப் பத்திரத்தில் 'அல்லாஹ்' என்ற பெயரைத் தவிர மற்ற அனைத்து வரிகளையும் கரையான் அரித்துவிட்டது என்பதாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வார்த்தையின் மீது அபூ தாலிப் அவர்களுக்கு எத்தகைய நம்பிக்கை இருந்ததென்றால், அவர்கள் முதலில் தமது சகோதரர்களிடம் இதனைத் தெரிவிக்கும்போது, 'இறைவன் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) இன்றுவரை என்னிடம் பொய் சொன்னதில்லை' என்று கூறினார்கள். பின்னர் அவர்கள், தம் சகோதரர்களுடன் குறைஷித் தலைவர்களிடம் சென்று, 'என் சகோதரனின் மகன் என்னிடம் ஒரு செய்தியைக் கூறியுள்ளார். அவர் என்னிடம் ஒருபோதும் பொய் சொன்னதில்லை. உங்கள் ஒப்பந்தப் பத்திரத்தின் மீது அல்லாஹ் கரையானைச் செலுத்திவிட்டான் என்றும், அதில் அல்லாஹ்வின் பெயரைத் தவிர மற்ற அனைத்தையும் அது அரித்துவிட்டது என்றும் கூறுகிறார். என் சகோதரனின் மகன் கூறுவது உண்மையாக இருந்தால், நீங்கள் உங்கள் சமூகப் புறக்கணிப்பு முடிவைக் கைவிட வேண்டும்; அவர் கூறுவது பொய்யாக இருந்தால் நான் அவரை உங்களிடம் ஒப்படைத்துவிடுகிறேன்; நீங்கள் அவரைக் கொன்றாலும் சரி! அல்லது உயிருடன் வைத்திருந்தாலும் சரி! என்றார். அதற்கு அவர்கள், இது மிகவும் நியாயமான விஷயம் என்றனர். பின்னர் அந்த ஒப்பந்தப் பத்திரத்தைப் பார்த்தபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியவாறே அது இருந்தது. இதனால் குறைஷியர்கள் தமது மக்களின் முன்னிலையில் வெட்கித் தலைகுனிந்தனர். (அல் வஃபாஃபா ஹவாலுல் முஸ்தஃபா, தொகுதி 1, பக்கம் 315 - 316)

குறைஷியர்கள் ஒருமுறை தங்கள் தலைவர்களில் ஒருவரான உத்பாவை பிரதிநிதியாக ஆக்கி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அனுப்பினார்கள். அவர் வந்து, நீர் ஏன் எங்கள் தெய்வங்களைத் திட்டுகின்றீர்? எங்கள் முன்னோர்களை ஏன் வழிகெட்டவர்கள் என்று கூறுகின்றீர்? உமக்கு என்ன விருப்பம் இருந்தாலும் நாங்கள் நிறைவேற்றுகிறோம்; நீர் இவற்றிலிருந்து விலகிக் கொள்ளும்! என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொறுமையுடனும், அமைதியுடனும் அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர் அனைத்தையும் கூறி முடித்ததும், அன்னார் (ஸல்) ஸூரா ஹாமீம் அஸ்ஸஜ்தாவின் சில வசனங்களை ஓதினார்கள். அதில், ஆது மற்றும் ஸமூது கூட்டத்தாருக்கு ஏற்பட்ட அந்த வேதனையைக் கொண்டு நான் உங்களை எச்சரிக்கிறேன் என்ற வசனத்தை அன்னார் (ஸல்) ஓதியபோது, உத்பா அன்னாரைத் தடுத்து, 'இத்துடன் போதும் நிறுத்துங்கள்' என்று கூறிவிட்டுத் தனது தோழர்களிடம் சென்றார். அவர் குறைஷிகளிடம் சென்று, முஹம்மது (ஸல்) ஏதேனும் ஒன்றைச் சொன்னால் அவர் ஒருபோதும் பொய் சொல்ல மாட்டார் என்பதை நான் அறிவேன்; அவர் கூறிய அந்த தண்டனை உங்கள் மீது வந்துவிடுமோ? என்று நான் அஞ்சுகிறேன் என்றார். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 1, பக்கம் 428 - 429, தாருல் குதுபில் இல்மியா பதிப்பு, பெய்ரூத் 2002-ம் ஆண்டு)

அபூ ஜஹ்லின் சாட்சியமும் நமக்கு காணக் கிடைக்கிறது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

அபூ ஜஹ்ல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், நாங்கள் உம்மைப் பொய்யர் என்று கூறவில்லை; மாறாக, நீர் கொண்டு வந்த அந்த போதனையைத்தான் - அதாவது, உமது மார்க்கத்தைத்தான் நாங்கள் பொய்யெனக் கூறுகிறோம் என்றான். (ஜாமிஉத் திர்மிதி, பாடம் தஃப்ஸீருல் குர்ஆன், ஹதீஸ் எண்: 3064)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது; அக்னஸ் பின் ஷரீக் என்பவர் பத்ர் போரின் போது அபூ ஜஹ்லைச் சந்தித்தார். அபுல் ஹகமே! இங்கே என்னையும் உன்னையும் தவிர நமது பேச்சைக் கேட்கக் கூடியவர் வேறு யாரும் இல்லை. முஹம்மதைப் பற்றி எனக்கு உண்மையைச் சொல்; அவர் உண்மையாளரா? அல்லது பொய்யரா? என்று கேட்டார். அதற்கு அபூ ஜஹ்ல், அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) அவர்கள் நிச்சயமாக உண்மையாளர்; அவர் ஒருபோதும் பொய் சொன்னதில்லை என்று பதிலளித்தான். (ஷரஹு ஷிஃபா தொகுதி 1, பக்கம் 303 - 304, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்:

முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் எதிரிகள், தமது தூதரை அடையாளம் காணவில்லையா? ஏன் அவரை மறுக்கிறார்கள்? இது எத்தகைய ஆச்சரியமான விஷயம் எனப் பாருங்கள்! நாற்பது ஆண்டுகளாக அவர்கள் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்தார்கள். அன்னாருடைய நற்பண்புகளையும் பழக்கவழக்கங்களையும் அவர்கள் நேரில் கண்டார்கள். முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு மிகச் சிறந்த நேர்மையாளர் என்பதை கண்கூடாகக் கண்ட சாட்சியங்கள் மூலம் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். ஆனால், அந்த உண்மையாளர் 'நான் உங்களை வழிநடத்துவதற்காக இறைவனால் அனுப்பப்பட்டிருக்கிறேன்' என்று கூறியபோது, அவரை எதிர்க்க நின்றனர். யாரோ ஒரு அந்நிய நபர் இதனைச் சொல்லியிருந்தால், அவர் முஹம்மது (ஸல்) அவர்களைப் பார்த்ததில்லை என்பதால் அன்னார் (ஸல்) இறைவனின் மீது அவதூறு சுமத்துகிறார் என்று எண்ணியிருக்கலாம். ஆனால், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முழு வாழ்க்கையும் ஒரு திறந்த புத்தகமாக யாருக்கு முன்னால் இருந்ததோ, அந்த மக்காவாசிகள் எவ்வாறு

அன்னாரை அவதூறு சுமத்துபவர் என்று கூறத் தொடங்கினார்கள்? அன்னார் (ஸல்) உண்மையாளர் என்று மனதார அறிந்திருந்தும், அன்னாரைப் பொய்யர் என்று கூறுவது எவ்வாறு சாத்தியம்?‘

அபூ ஜஹ்ல், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எத்தகைய பெரிய எதிரியாக இருந்தான்! முன்னரும் (அவன் கூறிய) ஒரு சாட்சியம் கிடைத்தது. இப்போதும் ஒன்று கிடைத்துள்ளது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைக்கும் போது, அபூ ஜஹ்ல் ஒரு சந்தர்ப்பத்தில், நாங்கள் உம்மைப் பொய்யர் என்று கூறவில்லை; நீர் முன்வைக்கும் இந்தப் போதனையைத்தான் நாங்கள் பொய்ப்பிக்கிறோம் என்று கூறினான். அதாவது, அபூ ஜஹ்ல் போன்ற ஒரு கடும் எதிரியுடைய, கருப்பு உள்ளம் கொண்டவனுடைய இதயம் கூட முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பொய்யர் என்று அழைக்கத் தயாராக இருக்கவில்லை. அதாவது, அன்னாரைப் பொய்யர் என்று கூறும்போது அவனது மனசாட்சியே அவனை உறுத்தியிருக்கிறது. தான் எத்தகைய இழிவான செயலைச் செய்கிறேன் என்று அவனது இதயம் துடித்திருக்க வேண்டும். ஆனால், தான் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் போதனையைத்தான் பொய்ப்பிக்கிறேன்; அவரைப் பொய்யர் என்று கூறவில்லை என்று அவன் ஒரு சாக்குப் போக்கைக் கூறினான். இது 'பாவத்தை விட மோசமான சாக்குபோக்கு' என்றாலும், அன்னாருடைய உண்மை மற்றும் நேர்மை காரணமாக மிகக் கடும் எதிரிகளின் இதயங்களிலும் எத்தகைய தாக்கம் ஏற்பட்டிருந்தது என்பதை இதிலிருந்து மதிப்பிட முடியும்.

உமையா பின் கலஃப் என்பவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மிகக் கடும் எதிரியாக இருந்தான். ஆனால், ஒரு சந்தர்ப்பத்தில் அவனது வாயிலிருந்தும் கூட, இறைவன் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) பேசும்போது உண்மையைத்தான் பேசுகிறார்; அவர் பொய் சொல்வதில்லை என்ற வார்த்தைகள் வெளிப்பட்டன. மந்திரம் என்பது தலைக்கு மேல் ஏறிப் பேச வேண்டும் என்பார்கள். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் மந்திரம் எத்தகைய பெரிய மந்திரமாக இருந்தது என்றால், அன்னார் தம் எதிரிகளின் நாவிலிருந்தும் தமது உண்மை மற்றும் நேர்மைக்குச் சாட்சியத்தைப் பெற்றுவிட்டார்கள். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 8, பக்கம் 363 - 364, 2023-ம் ஆண்டு)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வந்தபோது, மக்கள் அன்னாரை நோக்கி விரைந்து சென்றார்கள். 'ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வந்துவிட்டார்கள்; ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வந்துவிட்டார்கள்; ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வந்துவிட்டார்கள்' என்று மக்கள் மூன்று முறை கூறினர். நானும் பார்க்க வேண்டும் என்பதற்காக மக்களுடன் சென்றேன். அன்னாருடைய முகத்தை நான் நன்றாகப் பார்த்தபோது, 'அன்னாருடைய முகம் ஒரு பொய்யரின் முகம் அல்ல' என்பதை அடையாளம் கண்டுகொண்டேன். நான் கேட்ட அன்னாருடைய முதல் போதனை இதுதான்: 'மக்களே! ஸலாத்தைப் பரப்புங்கள்; உணவளியுங்கள்; உறவினர்களுடன் நல்ல விதத்தில் நடந்து கொள்ளுங்கள்; **மக்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது இரவு நேரத்தில் தொழுகையில் ஈடுபடுங்கள். (அவ்வாறு செய்வீர்கள் என்றால்,) நீங்கள் நிம்மதியுடன் சொர்க்கத்தில் நுழைவீர்கள் என்றார்கள்.‘** (ஸுனன் இப்னு மாஜா, ஹதீஸ் எண்: 3251)

மதீனாவின் யூதர்களிடமிருந்தும் இவ்வாறான சாட்சியங்கள் காணக் கிடைக்கின்றன. முஸ்லிம்களுக்கும் பனூ குறைஸா என்ற யூதக் கோத்திரத்திற்கும் இடையே பரஸ்பர ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்று இருந்தது. அகழ்ப் போரின் போது, பனூ நளீர் கோத்திரத்தின் தலைவன் ஹுயை பின் அக்தப் பனூ குறைஸா கோத்திரத்தின் தலைவன் கஅப் பின் அஸத் - யிடம் சென்று, முஸ்லிம்களைத் தோற்கடிப்பதற்காக அவர்களுடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு குறைஷிகளுக்கு உதவுமாறு தூண்டினான். அந்த நேரத்தில், பனூ குறைஸாவின் தலைவனாகவும் முஸ்லிம்களின் எதிரியாகவும் இருந்த கஅப் பின் அஸத், நான் முஹம்மதுடன் ஒப்பந்தம் செய்துள்ளேன்; நான் ஒருபோதும் அந்த ஒப்பந்தத்தை முறிக்க மாட்டேன்; நான் அவரிடமிருந்து நன்றியுணர்வு மற்றும் உண்மையைத் தவிர வேறெதையும் கண்டதில்லை என்று கூறினான். (அல் பதாயஃ வன் நன்நஹாயஃ, தொகுதி 6, பக்கம் 35- 36,தாருல் ஹிஜ்ர் பதிப்பு 1997-ம் ஆண்டு)

அதேபோல் ஓர் அறிவிப்பில் உபைது பின் உமைர் என்பவர் அறிவிக்கிறார்:

'நான் நகைச்சுவை செய்தாலும் அதிலும் உண்மையை மட்டுமே பேசுவேன் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதை நீங்கள் கேட்டதில்லையா?' என்று ஒரு நபர் ஹஸ்ரத் இப்னு உமர் அவர்களிடம் கேட்டார். அதற்கு அவர் 'ஆம்! (கேட்டுள்ளேன்)' என்று பதிலளித்தார். (முஃஜமுல் கபீர் லில்தப்ரானீ, தொகுதி 12, பக்கம் 391, ஹதீஸ் எண்: 13443)

பஹ்ஸ் பின் ஹகீம் தனது பாட்டனார் வழியாக அறிவிக்கிறார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டேன்: 'யாராவது மக்களைச் சிரிக்க வைப்பதற்காகப் பொய் பேசினால் அவருக்கு அழிவுதான்! அவருக்கு அழிவுதான்! அவருக்கு அழிவுதான்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். சிறிய அளவிலான பொய்யைக் கூட அன்னார் (ஸல்) கடுமையாகத் தடுத்ததோடு, பெரும் எச்சரிக்கையும் விடுத்தார்கள். (ஸுனன் தாவூத், ஹதீஸ் எண்: 4990)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து எதைச் செவியுற்றாலும் அதனை நினைவில் வைத்துக்கொள்வதற்காக எழுதி வைப்பேன். பின்னர் குறைஷியர்கள் என்னைத் தடுத்து, 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு மனிதர்தானே. அன்னார் கோபத்திலும் பேசுவார்கள்; மகிழ்ச்சியிலும் பேசுவார்கள். அப்படியிருக்க நீர் கேட்பதையெல்லாம் எழுதி வைக்கிறீரே?' என்று கேட்டனர். உடனே நான் எழுதுவதை நிறுத்திவிட்டேன். பிறகு நான் இது குறித்து ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கேட்டபோது, அன்னார் தமது விரலால் தம் நாவைச் சுட்டிக்காட்டி, 'நீர் எழுதுவீராக! எனது உயிர் எவன் கைவசம் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! இந்த நாவிலிருந்து சத்தியத்தையும் உண்மையையும் தவிர வேறொன்றும் வெளிப்படாது. (ஸுனன் தாவூத், ஹதீஸ் எண்: 3646)

இந்த நாவிலிருந்து உண்மையும், சத்தியமுமே வெளிப்படும். எனவே நிச்சயமாக எழுதுவீராக!' என்று கூறினார்கள்.‘

அன்னார் (ஸல்) பொய்க்கு எதிராக இவ்வளவு நுணுக்கமாக அறிவுரை வழங்கக் கூடியவர்களாக இருந்தார்கள். இது குறித்து முன்பும் கூறப்பட்டது.

ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஆமிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

'ஒரு நாள் எனது தாயார் என்னை அழைத்தார். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்கள் வீட்டில் அமர்ந்திருந்தார்கள். எனது தாயார் என்னிடம், 'இங்கே வா! நான் உனக்கு ஒன்று தருகிறேன்' என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என் தாயாரிடம், 'நீ அவருக்கு என்ன கொடுக்க எண்ணினாய்?' என்று கேட்டார்கள். அதற்கு அவர் 'நான் அவருக்குப் பேரிச்சம்பழம் கொடுக்கப் போகிறேன்' என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'ஒருவேளை நீ அவருக்கு ஏதேனும் கொடுக்காமல் இருந்திருந்தால், உன் கணக்கில் ஒரு பொய் எழுதப்பட்டிருக்கும்' என்று கூறினார்கள்.‘ இதுதான் அந்த நுணுக்கமான போதனை ஆகும். (ஸுனன் அபூ தாவூத்,

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

ஹதீஸ் எண்: 4991)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'உண்மையைப் பொறுத்தவரை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தனிப்பட்ட அந்தஸ்து எவ்வளவு உயர்ந்தது என்றால், அன்னாருடைய சமுதாயமே அன்னாருக்கு 'ஸித்தீக்' (உண்மையாளர்) என்று பெயரிட்டிருந்தது. அன்னார் (ஸல்) தமது ஜமாஅத்திற்கும் எப்போதும் உண்மையில் நிலைத்திருக்குமாறு அறிவுறுத்தி வந்தார்கள். தமது அந்தஸ்து உயர்ந்ததாக இருந்தது ஒருபுறமிருக்க, தமது ஜமாஅத்தையும் அனைத்து வகையான பொய்யின் நிழல் கூட இல்லாத அளவுக்கு மேலான உண்மையில் நிலைநிறுத்த அன்னார் (ஸல்) முயற்சி செய்தார்கள். 'உண்மைதான் நன்மையின் பக்கம் கவனம் செலுத்தத் தூண்டுகிறது. நன்மைதான் மனிதனுக்குச் சொர்க்கத்தைப் பெற்றுத் தருகிறது; உண்மையின் அசல் நிலை என்னவென்றால், மனிதன் தொடர்ந்து உண்மையை உரைத்துக் கொண்டே செல்ல வேண்டும். இறுதியில் அவன் அல்லாஹ்வின் முன்னிலையிலும் உண்மையாளராகக் கருதப்பட வேண்டும்' என்று அன்னார் (ஸல்) அடிக்கடி கூறி வந்தார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஒரு நபர் கைதியாகக் கொண்டு வரப்பட்டார். அவர் பல முஸ்லிம்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்தவர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த நபர் கொல்லப்பட வேண்டியவர் என்று கருதினார்கள். எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஏதேனும் சைகை காட்டினால் அவரை உடனே கொன்றுவிடலாம் என்ற எண்ணத்தில் அன்னாரின் முகத்தையே மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த நபர் அங்கிருந்து சென்ற பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அந்த நபர் கொல்லப்பட வேண்டியவர் அல்லவா?' என்று கேட்டார்கள். அதற்கு அன்னார் (ஸல்), 'அவர் கொல்லப்பட வேண்டியவர் என்றால், நீர் ஏன் அவரைக் கொல்லவில்லை?' என்று கேட்டார்கள். அதற்கு உமர் (ரலி) அவர்கள்,அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் கண்ணால் சைகை செய்திருந்தால் நான் அவ்வாறு செய்திருப்பேன்' என்றார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'ஒரு நபி ஒருபோதும் மோசடி செய்பவராக இருக்க முடியாது. நான் வாயால் ஒருவரிடம் அன்பு பாராட்டிப் பேசிவிட்டு, கண்ணால் அவரைத் தீர்த்துக் கட்டுமாறு சைகை செய்வது எவ்வாறு சாத்தியமாகும்? (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 418)

இது ஒருபோதும் முடியாது. இது மோசடியாகும்; என்னிடமிருந்து இத்தகைய செயல் ஒருபோதும் வெளிப்படாது' என்று கூறினார்கள்.

இவ்வாறாக, எதிரிகள் கூட ஒப்புக் கொள்ளும் வகையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உண்மை மற்றும் வெளிப்படையான பேச்சு ஆகியவற்றில் உயர்ந்த தரங்களை நிலைநாட்டினார்கள். அதே சமயம், தம்மைப் பின்பற்றுபவர்களையும் வாய்மையின் இத்தகைய உயர்ந்த நிலையை எட்டுமாறு அறிவுறுத்தினார்கள்.

**எனவே, இன்று ஒவ்வோர் அஹ்மதியும் தமது உண்மையின் தரம் எவ்வாறு உள்ளது? என்பது குறித்து தம்மைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்; நம்மிடம் உள்ள பலவீனங்களை நாம் நீக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு இதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக!**

தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழ வைப்பேன். அது மதிப்பிற்குரிய ஷாஹிதா அஹ்மத் ஸாஹிபா அவர்களுடையதாகும். அவர் மிர்ஸா நஸீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மனைவி ஆவார். கடந்த சில தினங்களுக்கு முன்பு 91 வயதில் காலமானார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

அன்னார் வஸிய்யத் செய்தவர் ஆவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மகள் வழி பேத்தியும், ஹஸ்ரத் நவாப் அப்துல்லாஹ் கான் ஸாஹிப் மற்றும் ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதி அமத்துல் ஹஃபீஸ் பேகம் ஸாஹிபா ஆகியோரின் மகளும் ஆவார். அன்னாருக்கு நான்கு மகன்கள் உள்ளனர்.

அன்னாருடைய மூத்த மகன் நுஃமான் இவ்வாறு எழுதுகிறார்: 'மர்ஹூமா தம்மிடம் மிகுந்த அன்பு பாராட்டினார் என்று ஒவ்வொருவரும் கூறுகிறார்கள்; மக்களுடன் நல்ல முறையில் பழகியிருக்கிறார். இல்லத்தைப் பொறுத்தவரை, எப்போதும் வீட்டில் மக்கள் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவார். விருந்தோம்பலில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்; எனக்கு வசதி இருந்தால் வீட்டை இன்னும் பெரிதாக்குவேன்.

அப்போதுதான் விருந்தினர்கள் வந்து தங்குவதற்குத் தாராளமாக அறைகள் இருக்குமே என்று அவர் வருத்தப்படுவார்.

அதேபோல் அவருடைய இளைய மகன் ரிஸ்வான் இவ்வாறு எழுதுகிறார்:

மர்ஹூமா பல நற்பண்புகளைக் கொண்டவராக இருந்தார்; ஏழை, பணக்காரர், பெரியவர், சிறியவர் என அனைவரிடமிருந்தும் இப்போது அவரின் மறைவையொட்டி இரங்கல் செய்திகள் வருகின்றன. அவர் எவ்வாறு அனைவரிடமும் அன்பைப் பகிர்ந்து கொண்டார், தனிப்பட்ட உறவை வைத்திருந்தார் என்பது குறித்து அவர்கள் நெகிழ்ச்சியுடன் கூறுகிறார்கள். அவர் இயல்பாகவே அன்பு காட்டும் சுபாவம் கொண்டவர்; அனைவரின் உள்ளங்களிலும் இடம் பிடிப்பார். குறிப்பாக, ஏதேனும் ஒரு காரணத்திற்காகத் துன்பத்திலோ அல்லது கவலையிலோ இருப்பவர்கள் மீது அவர் தனி கவனம் செலுத்துவார். பலவீனமானவர்களின் பக்கம் அவர் எப்போதும் துணை நின்றார். எப்போதும் பலவீனமானவர்களுக்கு ஆதரவாக இருங்கள் என்று பிள்ளைகளுக்கும் அவர் அறிவுரை வழங்கி வந்தார். அவரிடம் மன உறுதியும், துணிச்சலும் அதிகமாக இருந்தது. அதனை நானே கண்டிருக்கிறேன். மாஷா அல்லாஹ்! அவர் மிகுந்த மன வலிமை கொண்டவர்.

மர்ஹூமாவின் சகோதரி ஃபௌஸியா ஷமீம் ஸாஹிபா – லாகூர் லஜ்னா தலைவியாகவும் இருந்தவர்; தற்போதும் தலைவியாக உள்ளார் என்றே நினைக்கிறேன். அவர் கூறும்போது, 'மர்ஹூமாவைக் குறித்து சில வார்த்தைகளில் எடுத்துரைக்க வேண்டுமென்றால் தியாகம், பொறுமை, துணிச்சல் மற்றும் அன்பின் உருவமாகத் திகழ்ந்தார்' என்று கூறியுள்ளார்.

மர்ஹூமாவின் மருமகள் அமத்துல் வகீல் கூறும்போது, 'விருந்தோம்பல் பண்பு அவரிடம் மிக மேலோங்கி இருந்தது' என்கிறார். இதைப் பற்றி அவருடைய பிள்ளைகளும் மக்களும் எனக்கு எழுதியுள்ளார்கள். அவருடைய விருந்தோம்பல் முறை எவ்வித பகட்டும் இன்றி மிக எளிமையாக இருக்கும்.

கடைசிக் காலத்தில் அவர் கீழே விழுந்ததில் இடுப்பில் காயம் ஏற்பட்டு சக்கர நாற்காலிக்கு மாறினார்கள்; இருப்பினும் மிகுந்த பொறுமையுடனும், நன்றியுடனும் அந்த நோய்க் காலத்தைக் கழித்தார்கள். ஒருபோதும் சிறு முறையீடைக் கூட முன்வைக்கவில்லை. அவர் மிகுந்த தைரியமிக்க நோயாளி ஆவார். எங்களை ஒருபோதும் சிரமப்படுத்தவில்லை என்று கூறுகிறார்.

அவருடைய மகன் வழி பேத்தி கதீஜா கூறும்போது, விருந்தோம்பல் குறித்து எழுதிய பிறகு, 'மர்ஹூமா அன்பும், அரவணைப்பும் கொண்ட பெண்மணி; கடந்த சில ஆண்டுகளாக மாதம் இரண்டு மூன்று முறை திருக்குர்ஆனை ஓதி முடிப்பார். ஏழைகள் மீது மிகுந்த அனுதாபம் கொண்டிருந்தார்; ஏழைகளுக்காக துஆ செய்யுமாறு எங்களுக்கும் அறிவுறுத்துவார்' என்று எழுதியிருக்கிறார்.

மர்ஹூமாவின் சகோதரியுடைய மகள்வழி பேத்தி நேஹா என்பவர் இங்கே வசிக்கிறார். அவர் கூறும்போது, 'மர்ஹூமா எப்போதும் நேர்மறையான எண்ணம் கொண்டவர்; வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் மதித்தார். வீட்டில் வேலை செய்யும்

பணியாளர்களைத் தனது சொந்த உறவினர்களைப் போலவே கவனித்துக் கொண்டார்' என்கிறார்.

எவ்வாறிருப்பினும், யாரைப் பற்றியும் எதிர்மறையான கருத்துக்களைக் கூறவோ அல்லது பிறர் உணர்வுகளைப் புண்படுத்தவோ அவர் எப்போதும் விரும்புவதில்லை என்பதை நானும் பார்த்திருக்கிறேன். மக்களின் உணர்வுகளை அவர் பெரிதும் மதிப்பார்.

அவர் மேலும் கூறும்போது: 'ஒருமுறை மர்ஹூமாவின் வீட்டில் பணியாற்றிய ஒரு பெண் ஊழியருக்குத் திருமணம் நிச்சயமாகி வீட்டிலிருந்து விடைபெற்றுச் சென்றபோது, மக்கள் தங்கள் சொந்த மகள்களை வழிஅனுப்பி வைக்கும்போது எவ்வாறு கலங்குவார்களோ, அவ்வாறே மர்ஹூமா மிகுந்த கவலையடைந்தார். 'இனி வீடு பொலிவிழந்துவிடுமே' என்று அவர் வருந்தினார். சில நேரங்களில் சிலருடைய நற்செயல்கள் பொதுவாக மறைந்தே இருக்கும்; ஆனால் யாருக்கு அந்த நன்மைகள் செய்யப்பட்டதோ அவர்கள் மூலமாகவே பின்னர் அவை தெரியவரும். மர்ஹூமாவும் அத்தகைய மக்களில் ஒருவராக இருந்தார்.

அல்லாஹ் அவருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!

தமிழாக்கம்
முரப்பி
A.P.தாரிக் அஹ்மது

* * * * * * * * * * *

**1- ம் பக்கத் தொடர்ச்சி.........**
**(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பொன் மொழிகள்.....)**

விடவும் இன்னும் முன்னேறி, எவ்வித காரணமும் சுயநலமும் இன்றி, ஒருவர் தம் நெருங்கிய உறவினருக்கு காட்டும் அதே நேசத்துடனும் ஆர்வத்துடனும் அல்லாஹ்வை வணங்குங்கள். மேலும் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குச் சேவை செய்யுங்கள். (ஷஹ்னாயே ஹக், ரூஹானி கஸாயின் தொகுதி 2, பக்கம் 361, 362)

* * * * * * * * * * *

## மாணவர் சேர்க்கை
## DaruS Sana'at Qadian
## கல்வி ஆண்டு: 2026-27

## (Ahmadiyya Vocational Training Centre)

தாருஸ் ஸனாஅத் காதியான், ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு) அவர்களின் ஒப்புதல் மற்றும் சிறப்பு வழிகாட்டுதலுடன் 2010 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த கல்வி நிறுவனத்தின் முக்கிய நோக்கம், அஹ்மதி மாணவர்களைத் திறமைசாலிகளாக மாற்றுவதும், அவர்களுக்குத் தொழில்நுட்பப் படிப்புகளைக் கற்றுக்கொடுத்து வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும் ஆகும். தாருல் சனாஅத் காதியான், அரசு நிறுவனமான NSIC டெல்லி மற்றும் ISO சான்றிதழ் பெற்ற ஒரு பதிவு செய்யப்பட்ட அமைப்பாகும். இதில் ஓராண்டு கால அளவிலான பின்வரும் படிப்புகள் கற்பிக்கப்படுகின்றன:

(1.)Computer applications (2.)Plumbing (3.)Electrician

(4.)Motor vehicle mechanic (5.)Diesel mechanic (6.)Welding

(7.)A.C & Refrigerator

பள்ளிப் படிப்பை முழுமையாக முடிக்க முடியாத அல்லது 8 மற்றும் 10-ஆம் வகுப்பிற்குப் பிறகு தொழில்நுட்பப் படிப்புகளைப் படிக்க விரும்பும் அஹ்மதி இளைஞர்கள், சேர்க்கைக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். அஹ்மதி குழந்தைகளுக்கான மார்க்கக் கல்விக்கும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிய கல்வி ஆண்டு 2026-27 க்கான சேர்க்கை தொடங்கியுள்ளது. இதற்கான வகுப்புகள் 1 ஆகஸ்ட் 2026 முதல் தொடங்கும்
கூடுதல் விபரங்களுக்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்:

darulsanaat.qadian@gmail.com
*9872725895,*8604024043
(முதல்வர், தாருஸ் ஸனாஅத் காதியான்)

**2 - ம் பக்கத் தொடர்ச்சி.........**
**(தலையங்கம்)**

அரசாங்கங்களின் வேலை மக்களின் நலனுக்காக நடவடிக்கை எடுப்பதாகும். எந்தவொரு முடிவின் மூலம் மக்களின் வாழ்க்கை எளிதாகுமோ, அத்தகைய முடிவுகளை எடுக்க வேண்டும். ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் மக்களின் வாழ்க்கையை நரகமாக்கும் அனைத்து வேலைகளையும் செய்வதாகவே தென்படுகிறது. இந்த ஆட்சியாளர்கள் தங்களின் தோல்விகளை மறைக்க போர்களைப் பயன்படுத்துகிறார்கள். மேலும் இதன் மூலம் உலகை ஒரு முடிவில்லாத அழிவை நோக்கித் தள்ளுகிறார்கள்.

பொதுவாக மேற்கத்திய நாடுகளும், குறிப்பாக அமெரிக்காவும், ஒவ்வொரு பிரச்சனைக்கும் இராணுவ பலத்தையே தீர்வாகக் கருதுகின்றன என்று ஒரு பிரபல அமெரிக்க அறிஞர் சமீபத்தில்

## பத்ர் பத்திரிகையை நீங்களும் படியுங்கள்
## உங்கள் நண்பர்களையும் படிப்பதற்கு ஆர்வமூட்டுங்கள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ' பத்ர் பத்திரிகையின் டிசம்பர் மாதம் 2014-ம் ஆண்டு சிறப்பு இதழுக்காக தமது தூதுச் செய்தியை அனுப்பியவாறு கூறினார்கள் :

' பத்ர் நிர்வாகமும் அதன் வாசகர்களும் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், இந்தப் பத்திரிகை ஜமாஅத்தின் ஆன்மீக சீர்திருத்தத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் தொடங்கப்பட்டது. நம் சான்றோர்கள் அசாதாரணமான சூழ்நிலைகளிலும் முழு அர்ப்பணிப்புடன் இதைத் தொடர்ந்து நடத்துவதற்காக பாடுபட்டனர். அவர்களின் துஆக்கள் மற்றும் தூய முயற்சிகளின் அருளினால் தான் இது இன்று வரை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. எனவே, அதிகப்படியான அஹ்மதிகள் இதைப் படித்துப் பயனடைய வேண்டும் என்பது இதன் தேட்டமாகும். அல்லாஹ் தன் அருளால், குறிப்பாக இந்தியாவில் வசிக்கும் அஹ்மதிகளுக்கும், பொதுவாக உலகின் பிற பகுதிகளில் வசிக்கும் அஹ்மதிகளுக்கும் இதைப் படிக்கவும், இதனுடன் தொடர்புடைய அருட்களைப் பெற்றுக் கொள்ளவும் நற்பேறு வழங்குவானாக! ஆமீன்!

'ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இந்த மிக முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் ஞானம் நிறைந்த அறிவுறுத்தலைக் கருத்தில் கொண்டவாறு, அஹ்மதியா ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கு விடுக்கப்படும் வேண்டுகோள் என்னவென்றால், ஒவ்வொரு குடும்பத்திலும் 'பத்ர் பத்திரிகையை' தொடர்ந்து வாசிப்பதை உறுதி செய்வது மிகவும் அவசியமாகும்.

பத்ர் பத்திரிகைகளில் திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் போதனைகள் மட்டுமின்றி, ஹுஸுர் அன்வர் அவர்களின் குத்பா பேருரைகள், உரையாடல்கள் மற்றும் பல்வேறு நாடுகளில் ஹுஸுர் அன்வர் அவர்கள் மேற்கொள்ளும் அருளுக்குரிய சுற்றுப் பயணங்களின் சுவாரசியமான மற்றும் ஈமானை வலுவூட்டக்கூடிய அறிக்கைகள் போன்றவை வெளியாகின்றன. இதனைப் படிப்பது ஒவ்வொரு அஹ்மதிக்கும் அவசியமானதாகும். அல்லாஹ்வின் அருளாலும், ஸய்யிதுனா ஹுஸுர் அன்வர் அவர்களின் பரிவாலும், உருது மொழியில் வெளிவந்த இந்தப் பத்திரிகை தற்போது தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி, பங்களா, ஒடியா ஆகிய மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகிறது.

இதுவரை 'பத்ர்' பத்திரிகையை தங்கள் பெயரில் பதிவு செய்யாத அஹ்மதி நண்பர்கள், உடனடியாக அதைத் தங்கள் பெயரில் பதிவு செய்து தாங்களும் படித்து, தங்கள் பிள்ளைகளுக்கும் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கும் படிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் அவர்களின் அறிவுறுத்தல்களை அதன் உண்மையான உணர்வுடன் பின்பற்றி நடப்பதற்கான நற்பேறை வழங்குவானாக! ஆமீன்! பத்ர் பத்திரிகை சரியான நேரத்திற்கு வராமல் இருந்தாலோ, அல்லது சந்தா செலுத்துதல் மற்றும் பிற தகவல்களுக்காக வாராந்திர பத்ர் பத்திரிகையின் அலுவலக மேலாளரைத் தொடர்பு கொள்ளவும். ஜஸாகமுல்லாஹ் (நிர்வாகம்)

* * * * * * * * * * *

கூறியுள்ளார்.

ராஜதந்திர நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, போர்தான் பிரச்சினைகளுக்கான தீர்வு என்றுக் கருதப்படுகிறது. ஈரான் போரைப் பொறுத்தவரை, இந்தப் போர் மிகவும் வேதனைக்குரிய சூழ்நிலைகளுக்கான முன்னோட்டமாகும். அநீதியும், இரட்டை நிலைப்பாடும் அனைவருக்கும் கண்டிப்பாக பாதிப்பை ஏற்படுத்தும்.

அநீதியிழைப்பவர் மற்றும் அநீதியிழைக்கப்பட்டவர் ஆகிய இருவருக்குமே உதவ வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது. இஸ்லாம் பழிவாங்குதல் என்ற நெருப்பை அணைப்பதற்கு போதனை நல்கியுள்ளது. பழிவாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் கூட, அது எவ்வளவு அநீதி இழைக்கப்பட்டதோ அந்த அளவுக்கு மட்டுமே என்றே கூறியுள்ளது.

உலகில் நடைமுறையில் உள்ள நீதி பரிபாலன அமைப்புகளோ தற்போது முற்றிலும் தோல்வியடைந்துவிட்டன. லீக் ஆஃப் நேஷன்ஸ் எவ்வாறு தோல்வியடைந்ததோ, அதேபோல் ஐக்கிய நாடுகள் சபையும் ஒரு தோல்வியடைந்த அமைப்பாக மாறிவிட்டது. ஐந்து நாடுகளுக்கு வீட்டோ அதிகாரம் வழங்கப்பட்டிருப்பது நீதியை கொலை செய்வதாகும்.

இன்று அதிகாரம் படைத்தவர்களுக்கு ஒரு சட்டமும், பலவீனமானவர்களுக்கு மற்றொரு சட்டமும் உள்ளது என்று கனடா பிரதமர் கூறியுள்ளார். மனித உரிமைகள் சாசனம் இப்போது வெற்று வார்த்தைகளாக மட்டுமே எஞ்சியுள்ளது. அதற்கு இப்போது எந்த மரியாதையும் எஞ்சியிருக்கவில்லை.

மேற்கத்திய நாடுகள் மற்ற சிறிய நாடுகள் மீது சுரண்டல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. அதற்காக, நாங்கள் பெண்களுக்கான உரிமைகளை வழங்க வேண்டும் என்ற புதிய சாக்குபோக்குகளைக் கண்டுபிடித்துள்ளனர். அதே நேரத்தில், இந்த நாடுகளின் போர்களின் காரணமாக ஆயிரக்கணக்கான பெண்கள் ஆதரவற்று, திறந்த வானத்தின் கீழ், எந்தவொரு வாழ்வாதாரமும் இன்றி தவிக்கிறார்கள் என்பதே இவர்களின் உண்மையான முகமாகும்.

சிரியா, ஈராக், லெபனான் மற்றும் தற்போது ஈரான் ஆகிய நாடுகளில் நடக்கும் அநீதியான நடவடிக்கைகளின் விளைவு இப்போது நம் கண் முன்னே உள்ளது என்றும், சக்திவாய்ந்த கொடுங்கோல் நாடுகள் தங்களின் அநீதியான போர்களை நியாயப்படுத்த இதுபோன்ற சாக்குபோக்குகளை உருவாக்குகின்றன என்பதை நாம் அறிவோம் என்றும் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் ஸ்பெயின் உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

ஏராளமான நபர்களும், அமைப்புகளும் இஸ்லாத்தின் பெயரைப் பயன்படுத்தி அநீதியின் பாதையைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதை முஸ்லிம் என்ற ரீதியில் நாம் அறிவோம். பின்னர் ஊடகங்கள் அவர்களின் செயல்களை மிகைப்படுத்தி, இவ்வாறு இஸ்லாத்திற்கு எதிராக தவறான கருத்துக்களைப் பரப்புகின்றன. இதனை சாக்குப்போக்காக ஆக்கிக் கொண்டு அநீதி மற்றும் அக்கிரமத்திற்கு காரணம் மார்க்கம் ஆகும் என்று கூறுவது அநீதியாகும். இஸ்லாத்தைக் குறித்தும் கூறக் கூடாது; வேறு எந்த மார்க்கத்தையும் குறித்தும் கூறக் கூடாது.

மதநல்லிணக்கத்திற்காக -வும், நீதிக்காகவும் பாடுபடுவது, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மிக முக்கியமான நோக்கமாகும். அதற்காக நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்வதாகும். இதே முக்கிய நோக்கத்தை அடைவதற்காக, நாங்கள் இந்த முயற்சிகளை மேற்கொள்கிறோம். இதனால் குறைந்தபட்சம் சிறிது எண்ணிக்கையையாவது, சில நபர்களையாவது எங்களின் உண்மை மற்றும் நீதிக்கான தூதுச் செய்தி சென்றடைய வேண்டும் என்று நாங்கள் முயற்சி செய்கிறோம். இதே நோக்கத்திற்காகத்தான் உலகின் பெரும் தலைவர்களுக்கு நான் கடிதங்களை எழுதினேன்..

நான் இஸ்ரேல் பிரதமருக்கும் கடிதம் எழுதினேன். தவ்ராத்தின் போதனைகளை அவருக்கு முன்வைத்தேன். இதேபோல் ஈரான் அதிபர் மற்றும் பிற முஸ்லிம் தலைவர்களுக்கும் கடிதங்கள் எழுதினேன். உலகம் எவ்வாறு நாளுக்கு நாள் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும் என்ற இந்தத் தூதுச் செய்தியை பிரிட்டிஷ் பிரதமர், அமெரிக்க அதிபர் மற்றும் சீன அதிபர் ஆகியோருக்கும் எட்ட வைத்தேன்.

தற்போதோ மனிதகுலத்தின் வாழ்விற்கே ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஆனால், வேதனை என்னவென்றால்,! இவர்கள் யாரும் இந்த விஷயங்களில் கவனம் செலுத்துவதில்லை. இந்த மக்கள் இதை கேட்க விரும்பவில்லை என்பதை உலகச் சூழ்நிலைகள் தெளிவாகக் காட்டுகின்றன. உலகில் அதிகரித்து வரும் போர்கள் இதையே சுட்டிக்காட்டுகின்றன.

உங்களின் சொந்த ஆசைகளைப் பின்பற்றாதீர்கள்; அது உங்களை நீதியிலிருந்து விலக்கி விடக் கூடும் என்பது இஸ்லாத்தின் போதனையாகும். திருக்குர்ஆன் மிகத் தெளிவாகக் போதிப்பது என்னவென்றால், உறுதியாக இருங்கள்; மேலும் நீதியை நிலைநாட்டுங்கள்; மேலும் பிறர் மீதான பகைமை உங்களை அநீதியிழைக்கும் படி தூண்ட வேண்டாம் ; மேலும் நீதியுடன் செயல்படுவது இறையச்சத்திற்கு மிக நெருக்கமானதாகும் என்று திருக்குர்ஆன் மிகவும் தெளிவாக போதனை நல்கியுள்ளது.

. இஸ்லாம் தன்னை ஏற்றுக் கொண்டவர்களின் உரிமைகளை மட்டும் நிலைநாட்டவில்லை; மாறாக தனது எதிரிகளின் உரிமைகளையும் நிலைநாட்டியுள்ளது. உங்களுக்கு ஞானம் மற்றும் அறிவுக் கூர்மைக்கான விஷயங்கள் வேறு எந்த சமூகத்திடமிருந்து கிடைத்தாலும், அதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள், ஏனெனில் அது உங்களுடைய தொலைந்து போன சொத்தாகும் என்று இஸ்லாம் தன்னை ஏற்றுக்கொண்டவர்களுக்கு அறிவுரை வழங்குகிறது.

இன்று உலக மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் அமைதியை விரும்புகிறார்கள், ஆனால் அதற்கு ஒவ்வொரு தனிமனிதனும் தன் பங்கை ஆற்ற வேண்டும்.

போப் அவர்கள் கூறியது போன்று, மூன்றாவது உலகப் போர் பல்வேறு பகுதிகளில் ஏற்கனவே கிட்டத்தட்ட தொடங்கிவிட்டது. இந்த உலகப் போரில் ஏற்படும் அழிவு, கடந்த உலகப் போர்களில் ஏற்பட்ட அழிவுகளைக் காட்டிலும் மிகக் கொடூரமானதாக இருக்கும் என்று நான் அஞ்சுகிறேன்.

எதிர்கால சந்ததியினருக்காக ஒரு அமைதியான உலகை விட்டுச் செல்வதும், அதற்காக அவரவர் அளவில் முயற்சி செய்வதும் நம் அனைவரின் மீதும் இன்று கடமையாகும். இல்லையெனில், எதிர்கால சந்ததியினர் நம்மை குற்றவாளிகளாகக் கருதுவார்கள். மேலும் நீங்கள் 'எத்தகைய ஓர் அழிந்துபோன உலகை எங்களுக்காக விட்டுச் சென்றுள்ளீர்கள்' என்று அவர்கள் கூறுவார்கள்.

எனவே, இந்த அமைதி கருத்தரங்கு இதே நோக்கத்திற்கான ஒரு முயற்சியாகும். இறைவனிடம் பிரார்த்தனை செய்வோம். இது ஒரு புதிய நம்பிக்கையின் முதல் கதிராக மாறட்டும்! மேலும் உலகம் இந்தத் தருணத்தில் அமைதியின் தேவையைப் புரிந்து கொள்ளட்டும். போரின் மேகங்கள் கலைந்து, அமைதியின் விடியல் மலரட்டும்! என்று அல்லாஹ்விடம் வேண்டுகிறேன். உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் உரை இரவு 7:09

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன . (13:29)

A. Khaleel Ahmad (Melapalayam)

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த TOLL FREE எண்ணில் போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 11 JUNE 2026 Issue No. 24

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

மணி வரை நீடித்தது. அதன் பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் துஆ செய்தார்கள். துஆவிற்குப் பிறகு வந்திருந்த விருந்தினர்கள் அனைவருக்கும் உணவு பரிமாறப்பட்டது. உணவுக்குப் பிறகு, ஹுஸூர் அன்வர் அவர்கள் மேடையில் நின்றவாறே, முக்கிய மேஜையில் அமர்ந்திருந்த மதிப்பிற்குரிய விருந்தினர்களுக்குச் சந்திப்புக்கான வாய்ப்பை வழங்கி, அவர்களுடன் சுருக்கமாக உரையாடினார்கள். .(அமைதி கருத்தரங்கின் மீதி அறிக்கை அடுத்த இதழில்........)

(நன்றி: அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 23 மே 2026)

தமிழாக்கம்

முரப்பி

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

**1 - ம் பக்கத் தொடர்ச்சி (தஃப்ஸீரே கபீர்).......**

மேலும், تَذَكَّرُوْنَ لَعَلَّكُمْ என்பதன் பொருள்: நீங்கள் அல்லாஹ்வின் உரிமைகளையும், அவனது அடியார்களின் உரிமைகளையும் நினைவில் கொள்ளுங்கள் என்பதாகும். அல்லது நீங்கள் இறைவனைப் புகழ்ந்து அவனது பெருமையை எடுத்துரைத்துரையுங்கள். மேலும், இதே இரண்டு நோக்கங்களுக்காக மட்டுமே மனிதன் படைக்கப்பட்டுள்ளான். எனவே, இந்த வசனத்தில் இந்த நற்செய்தியும் வழங்கப்பட்டுள்ளது. அதாவது, இந்த போதனையின்படி நீங்கள் செயல்பட்டால், உங்கள் படைப்பின் நோக்கத்தை நீங்கள் அடைந்து விடுவீர்கள்.

எந்த அளவு சிறிய வசனமாகும்! ஆனால் எவ்வாறு இதில் எல்லா விவகாரங்களிலும் ஒளிபாய்ச்சப்பட்டுள்ளது! என்று பாருங்கள்! மேலும் திருக்குர்ஆன் எந்தெந்த விஷயங்களின் சிறப்புகள் குறித்து வாதம் புரிகிறதோ, அவை அனைத்தின் மீதும் இது எவ்வாறு வெளிச்சம் பாய்ச்சப்பட்டுள்ளது! இந்தச் சுருக்கமான அமைப்பில் இத்தகைய விரிவான விளக்கம் திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த வேதத்திலும் காணப்படுவதில்லை. மேலும் இதில் எந்தவொரு ஒளிவு மறைவோ அல்லது புதிரோ இல்லை. விஷயம் மிகவும் தெளிவாக உள்ளது, ஒவ்வொரு புத்திசாலியும் மிகச் சிறிய சிந்தனையின் மூலமே உண்மைத்துவத்தை அறிந்துகொள்ள முடியும்.

இப்போது நான் இந்த வசனத்தின் கருத்தை சற்றே விரிவாக எடுத்துரைக்கின்றேன்.

உலகில் உள்ள ஒவ்வொரு விஷயத்திற்கும் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன; அதாவது நேர்மறை அம்சம் என்ற ஒன்றும், எதிர்மறை அம்சம் என்ற ஒன்றும் இருக்கின்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதன் இந்த இரண்டு அம்சங்களும் முழுமையடையாத வரை அந்தப் பொருள் முழுமை பெறாது. அதாவது, எந்தெந்த விஷயங்கள் அதன் முழுமைக்கு அவசியமோ அவை அதில் காணப்பட வேண்டும். மேலும் அதன் தன்மையில் குறைபாட்டை ஏற்படுத்தும் விஷயங்களிலிருந்தும் அது தூய்மையாக இருக்க வேண்டும்.

ஒரு முழுமையான மார்க்கப் போதனைக்கு, மார்க்கத்தின் மூன்று முக்கிய சிறப்பம்சங்களைக் கருத்தில் கொண்டவாறு, முழுமையான போதனைக்காக கீழ் காணும் விஷயங்கள் இருப்பது அவசியமாகும்:

1) எந்த விஷயங்களால் ஆன்மிகம் தனது முழுமையை அடைய முடியுமோ அந்த விஷயங்களைச் செய்வதற்கு அது கட்டளையிட வேண்டும், மேலும் அந்த சிறப்பிலிருந்து இழப்பிற்குரியதாக ஆக்கும் விஷயங்களிலிருந்து அது தடுக்க வேண்டும்.

2) அது அத்தகைய சட்டத்தை வகுக்கும்போது அது ஏதோ ஒரு தனிநபருக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகத்துடன் மட்டும் தொடர்புடையதாக இருக்கக் கூடாது. மாறாக அது பலதரப்பட்ட மக்கள் மற்றும் பல சமூகங்களுடன் தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டும். மேலும் எவர்களுக்காக அது வடிவமைக்கப்பட்டதோ அவர்களின் இயல்புகளுக்கு பொருத்தமானதாக இருக்க வேண்டும். மேலும், எத்தகைய கட்டளைகளை வழங்க வேண்டும் என்றால், அதன்படி ஒவ்வொருவரும் தத்தமது ஆற்றலுக்கு ஏற்ப செயல்படக் கூடியதாக இருக்க வேண்டும்.

3) ஒரு முழுமையான போதனையில் காணப்பட வேண்டிய மூன்றாவது சிறப்பம்சம் என்னவென்றால், அதன் கட்டளைகள் மனித குலம் செயல்படக் கூடியதாக இருக்க வேண்டும். மேலும் அவற்றின் மூலம் மார்க்கத்திலோ அல்லது ஒழுக்கத்திலோ, அல்லது பகுத்தறிவிலோ அல்லது நாகரிகத்தில் எந்தவொரு குழப்பமும் ஏற்படக் கூடாது.

. அல்லாஹ் தஆலா இந்த வசனத்தில் அந்த மூன்று சிறப்புகளையும் ஒன்று சேர்த்துள்ளான்.

பாருங்கள்! இது எவ்வளவு சிறிய வசனமாகும்! ஆனால் இதில் (நேர்மறை மற்றும் எதிர்மறை என்ற) முழுமையின் இரு அம்சங்களும் எவ்வளவு அழகாகவும், நேர்த்தியாகவும் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. மூன்று விஷயங்கள், அதாவது நீதி, நன்மை செய்தல் மற்றும் உறவினர்களுக்குக் கொடுப்பதைப் போன்று கொடுத்தல் ஆகியவற்றைச் செய்வதற்கு கட்டளையிடப்பட்டுள்ளது; மேலும் மூன்று விஷயங்கள், அதாவது வெட்கக்கேடான செயல்கள் (ஃபஹ்ஷா), வெறுக்கத்தக்க காரியங்கள் (முன்கர்) மற்றும் வரம்பு மீறுதல் ஆகியவற்றிலிருந்து தடுக்கப்பட்டுள்ளது. நீதியின் பொருள் சம உரிமை ஆகும், அதாவது தன்னுடன் எவ்வாறு நடந்து கொள்ளப்பட்டதோ அதேபோன்று ஒரு நபர் மற்றொரு நபருடன் நடந்து கொள்வதாகும். அவர் மீது அநீதி இழைக்கப்பட்டால், பின்னர் எவ்வளவு அநீதி இழைக்கப்பட்டதோ அதே அளவு அவர் பழிவாங்கிக் கொள்ள முடியும். ஆனால் அதைவிடக் கூடுதலாகக் கடுமை காட்ட முடியாது. அவருடன் யாராவது அழகிய முறையில் நடந்துகொண்டால், அவருடன் குறைந்தபட்சம் அதே அளவு அழகிய முறையில் நடந்துகொள்வது அவர் மீது கடமையாகும்.

(தஃப்ஸீர் கபீர், பாகம் நான்கு, பக்கம் 168)

* * * * * * * * * * *

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, ( opp. Karuna Clinic ) Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad